வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 24.08.2021 செவ்வாய்க்கிழமை | இதழ் : 263 | பக்கங்கள் : 16

# ஒக.30இற்கு பின்பும் முடக்கமா? இதுவரை தீர்மானிக்கவில்லை

## சொல்கிறார் சுகாதார அமைச்சர் கெஹலிய

கொழும்பு, ஓகஸ்ட் 24

**நாடு முடக்கப்பட்டுள்ள காலப் பகுதியை நீடிப்பதற்கு அரசாங்கம் இதுவரை தீர் மானிக்கவில்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் நாட்டை முடக்குமாறு பல்வேறு தரப்பினர் கோரிக்கை விடுத்து வந்த பின்னணியில், கடந்த 21ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்த அரசு கடந்த 20ஆம் திகதி தீர்மானித்திருந்தது.

எனினும், நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக, மேலும் 10 நாட்கள்

15



## கௌரி தவராசா காலமானார்

கொழும்பு, ஒக. 24

மூத்த சட்டத்தரணி திருமதி கௌரிஷங்கரி தவராசா நேற்று காலமானார். இவர், ஜனாதிபதி சட்டத்தரணி கே. வி. தவராசாவின் துணைவியாரும், மனித உரிமைகள் ஆர்வலருமாவார்.

திடீர் சுகவீனமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கொரோனா தொற்று பாதிப்பாலும் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகள், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பதியப்பட்ட வழக்குகள் மற்றும்

15

## யாழில் 102 பேர் உட்பட வடக்கில் 135 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்ப்பாணத்தில் 102 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 135 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்தில் நேற்று 737 பேரின் மாதிரிகள் பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 114 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், யாழ். போதனா மருத்துவமனையில் 29 பேரும், உடுவில் மருத்துவ அதிகாரி பிரிவில் 29 பேரும், கோப்பாய் பிரதேச மருத்துவமனையில் 14 பேரும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 10 பேரும், தெல்லிப்பழை மருத்துவ அதிகாரி பிரிவில் 8 பேரும், சண்டிலிப் பாய் மருத்துவ

15

## யாழ்ப்பாணத்தில் கொரோனாவுக்கு மூன்று பேர் பலி!

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றால் நேற்று மூன்று பேர் உயிரிழந்தனர் என்று போதனா மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித் தன.

யாழ். போதனா மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த ஊர்காவற்றுறையை சேர்ந்த 83 வயது பெண், ஒட்டுமடத்தை சேர்ந்த 73 வயது ஆண், மானிப்பாயில் வசித்து வந்த முஸ்லிம் சமூகத்தவரான ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்தனர் என்று அறிய வருகின்றது. (ஐ)

## குருநகர் வாள்வெட்டு: காயமடைந்தவர் பலி

யாழ்ப்பாணம், ஒக. 24

வன்முறைக் கும்பலின் வாள் வெட்டுத் தாக்குதலுக்கு இலக்கான ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

குருநகரைச் சேர்ந்த ஜெரன் (வயது -24) என்பவரே பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியில் திருச்சிலுவை சுகநல நிலையத்துக்கு அண்மையாக நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரை

15

## கொரோனா தொற்றால் மேலும் 194 பேர் மரணம்

கொழும்பு, ஒக. 24

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 194 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 7 ஆயிரத்து 560 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 194 பேரில் 103 பெண்களும், 91 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 20 ஆண்கள், 29 பெண்கள் என 49 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 145 பேர் 60 வய துக்கு மேற்பட்டவர் களாவர். இதில் 71 ஆண்களும், 74 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## அமெ.தூதருடன் பீரிஸ் சந்திப்பு

கொழும்பு, ஒக. 24

இலங்கையின் புதிய வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸை அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்லிட்ஸ் நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்திக்கொள்வது குறித்த கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் "எக்ஸ்

15

## கொரோனா நோயாளர் ஒரு நாளைக்கு 2 லீற்றர் தண்ணீர் குடிப்பது அவசியம்

கொழும்பு, ஒக. 24

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு லீற்றருக்கு மேல் தண்ணீர் குடிக்கவேண்டும் என்று கொழும்பு மருத்துவ பீடத்தின் ஊட்டச்சத்து பேராசி ரியர், மருத்துவ வல்லுநர் ரணில் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

இல்லையென்றால், கொரோனா நோயாளிகளுக்கு நீரிழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக அவர்

15

## உச்சம் தொட்டது தொற்று: 4,353 பேர் அடையாளம்

கொழும்பு, ஒக. 24

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான 4 ஆயிரத்து 353 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதுவே நாளொன்றில் இதுவரை அடையாளம் காணப்பட்ட அதிகளவிலான தொற்றாளர்களின் எண்ணிக்கையாகும்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்ட

15

## எந்த தியாகத்துக்கும் அரச எம்.பிக்கள் தயார்

### திலும் அமுனுகம கூறுகிறார்

கொழும்பு, ஒக. 24

நாட்டில் கொவிட்-19 தொற்றுநோயின் கட்டுப்பாடு இன்னும் சுகாதாரத்துறையிடம் இழக்கப்படவில்லை என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் ஊடகங்களிடம் பேசியபோதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அரசின் அனைத்து உறுப்பினர்களும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு காலத்தை நீடிக்க தேவைப்பட்டால் சுகாதார வல்லுநர்களின் ஆலோசனையின்அடிப்படையில்அரசு அடுத்த நடவடிக்கை

15

## கொரோனா இடரை எதிர்கொள்ள தேசிய வேலைத்திட்டம் அவசியம்

### பிரதான எதிர்க்கட்சி பரிந்துரை

கொழும்பு, ஒக. 24

கொவிட் தொற்று பரவல் தேசிய அனர்த்தம் என்பதால் அந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து தேசிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். இதனை அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான முயற்சியாக அரசாங்கம் கருதக்கூடாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ

15



# சிறுமி ஹிஷாலினி மரணம்; சந்தேகநபராக ரிஷாத் எம்.பி

கொழும்பு, ஓக. 24

சிறுமி ஹிஷாலினி மரணத்தில் சந்தேகநபர்களின் பட்டியலில் ஐந்தாவது நபராக ரிஷாத் பதியுதீனும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சிறுமியின் மரணத்தில் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்பட்டு கைது செய்யப்பட்ட, ரிஷாத் பதியுதீன் எம்.பியின் மனைவி, மைத்துனர் உட்பட நான்கு சந்தேக நபர்களின் விளக்க மறியலும் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும், செப். 6ஆம் திகதி வரை இவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, ஏற்கனவே வேறொரு வழக்கில் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ரிஷாத் பதியுதீன் எம்.பியின் பெயரும் சந்தேகநபராக பெயரிடப்பட்டுள்ளது. இவர் இந்த மரணத்துடன் தொடர்புடைய ஐந்தாவது சந்தேகநபராகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்.

ரிஷாத் பதியுதீன் எம்.பியின் வீட்டில் பணியாற்றிய நுவரெலியா - டயகம 16 வயது சிறுமியான ஹிஷாலினி கடந்த ஜூலை 3ஆம் திகதி தீ காயங்களுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி மரணமானார். உடல்கூற்று பரிசோதனையில் அவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# "இலங்கையுடனான உறவை விரிவுபடுத்த ரஷ்யா ஆர்வம்!"

கொழும்பு, ஓக. 24

இலங்கையுடனான வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் இரு தரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் ரஷ்யா ஆர்வமாக உள்ளதாக தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸுடனான சந்திப்பின்போது அந்த நாட்டின் தூதுவர் யூரி பி. மேட்டேரி இதனை குறிப்பிட்டார்.

இலங்கையின் நீண்டகால நட்பு மற்றும் ரஷ்யாவுடனான பரந்த ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை சந்திப்பின்போது வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்பீரிஸ் வலியுறுத்தினார்.

பலதரப்புக் கோட்பாடுகளில் கொள்கை மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து இலங்கைக்கு ரஷ்யா வழங்கிய ஆதரவுகளுக்காக நன்றிகளையும் தெரிவித்தார்.



வர்த்தகம், முதலீடு, சுற்றுலா, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல துறைகளில் இருதரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதில் ரஷ்யா ஆர்வமாக உள்ளதாக இதன்போது அந்நாட்டு தூதுவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பு, வர்த்தகம், பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் 2022ஆம் ஆண்டு இலங்கை - ரஷ்யா இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரல் ஆகிய விடயங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டன.

கோவிட்-19 தொற்று நோயால் இன்று மனிதகுலம் எதிர்கொள்கின்ற பொதுவான சவால்களுக்கு பகிரப்பட்ட தீர்வுகளை பின்பற்றுவதன் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# அவசர தொலைபேசி இலக்கத்திற்கு 4 நாட்களில் 4 ஆயிரம் அழைப்புகள்!

கொழும்பு, ஓக. 24

சுகாதார அமைச்சின் அவசர தொலைபேசி இலக்கமான 247 என்ற அவசர தொலைபேசி இலக்கத்திற்கு கடந்த 4 நாட்களில் 4 ஆயிரம் பேரின் அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அத்துடன், 1904 இலக்கத்திற்கு 11 ஆயிரம் குறுஞ்செய்திகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் மருத்துவர் இந்திக கருணாரத்ன தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சு , இலங்கை மருத்துவ சங்கம், மொபிரெல் நிறுவனம் மற்றும் கோவிட் தடுப்புக்கான தேசிய செயல்பாட்டு மையம் இணைந்து கோவிட் தொற்றாளர்களுக்கான சேவை வழங்கும் தொலைபேசி மற்றும் குறுஞ்செய்தி சேவையை ஆரம்பித்துள்ளன. இதற்கமைய அவசர சிகிச்சை தேவைப்படும் தொற்றாளர்கள் 1990 அம்புலன்ஸ் சேவைக்கு அழைத்து வைத்தியசாலைக்கு செல்ல முடியும்.

இதேவேளை மேல் மாகாணத்திலுள்ள எந்தவொரு நபரும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவராக இருந்தாலோ அல்லது தொற்றாளருடன் நேரடி தொடர்பை பேணியமையால் தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்று சந்தேகிப்பவராக இருந்தாலோ 1904 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்ப முடியும். அல்லது 247 என்ற இலக்கத்திற்கு அழைத்து வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த இலக்கத்திற்கு அழைத்து 2 நிமிடங்களில் மருத்துவர்கள் நோயாளர்களுடன் உரையாடுவர். அதன் பின்னர் தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட வேண்டியவர்களா அல்லது வீடுகளில் சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்களா என்பது குறித்து மருத்துவர்கள் தீர்மானிப்பர் - என்றார். (ஐ)

## தற்கொலை செய்த நபருக்கு கொரோனா

பதுளை, ஓக. 24

வீட்டில் தற்கொலை செய்து கொண்ட நபர் ஒருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பதுளை - மஹிலகஸ் தென்ன பகுதியைச் சேர்ந்த 37 வயதான நபரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் உறவினர்களுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் தனியாக வசித்து வந்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# 2222 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 2 ஆயிரத்து 222 பேர் குணமடைந்து நேற்று வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 381 ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் இதுவரை 3 இலட்சத்து 90 ஆயிரம் பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கல்வி tv CHANNEL-1

## 24.08.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | கணிதம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | நாடகமும் அரங்கியலும் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | உயிரியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | கணிதம் |

கல்வி tv CHANNEL - 2

## 24.08.2021 செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கணிதம் |
| 09.00 | தரம்-02 | தமிழ் |
| 09.45 | தரம்-03 | கணிதம் |
| 10.30 | தரம்-03 | English |
| 11.15 | தரம்-04 | கணிதம் |
| 12.30 | தரம்-04 | English |
| 01.15 | தரம்-05 | கணிதம் |
| 02.00 | தரம்-05 | English |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | தமிழ் |
| 06.00 | தரம்-03 | கணிதம் |
| 06.45 | தரம்-03 | English |
| 07.30 | தரம்-04 | கணிதம் |
| 08.15 | தரம்-04 | English |
| 09.00 | தரம்-05 | கணிதம் |
| 09.45 | தரம்-05 | English |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கணிதம் |
| 12.30 | தரம்-03 | English |
| 01.15 | தரம்-04 | கணிதம் |
| 02.00 | தரம்-04 | English |
| 02.45 | தரம்-05 | கணிதம் |
| 03.30 | தரம்-05 | English |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
24.08.2021 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆவணி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# 13இல் இணக்கம்?

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், எம். ஏ. சுமந்திரன் மற்றும் சிறிகாந்தா ஆகியோர் ‘சூம்’ வழியாக கலந்துரையாடியிருக்கின்றனர் எனவும் பொதுவிடயங்களில் இணங்கி பயணிப்பதற்கு, இணங்கியிருக்கின்றனர் என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையான அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்வதில்லை என்றாலும் அதனை முழுமையாக அமுல்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோருவது, மற்றும் இந்தியாவிடமும் கோருவது என்பதில் இணக்கம் கண்டிருக்கின்றனர் எனவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. அவ்வாறு இணக்கம் காணப்பட்டிருந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய விடயம் என்பதில் மாறுபட ஏதுமில்லை.

முரண்பாடுகள் உள்ள கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இந்த சந்திப்பில் பங்குகொண்டிருப்பது, ஆகக் குறைந்தது தங்களுக்குள் பேசிக்கொள்ள முயற்சித்திருப்பது, ஆரோக்கியமான ஒரு முன்னெடுப்பாகும். இன்றைய சூழலில் ஆகக்குறைந்தது தங்களுக்குள் முட்டி மோதிக்கொண்டிருந்த அனைவரும் பொது விடயங்களில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். சூழ்நிலைகளை சரியாகக் கணிக்காமல் சுலோகங்களை சுமந்து செல்வதால் பயனில்லை. நேற்றைய தலையங்கத்தில் குறிப்பிட்டது போன்று, இன்றைய ஈழத் தமிழர் அரசியல் என்பது முற்றிலுமாக வெளியாருக்காக காத்திருக்கும் அரசியல் மட்டுமே! ஆனால், வெளியாருக்காக காத்திருக்கும்போது அந்த வெளியாரையும் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

வெளியாரை சரியாக விளங்கிக் கொள்ளாமல் வெளியார் தொடர்பில் அபரிமிதமான கற்பனைகளை வளர்ப்பதும் ஆபத்தானது. ஈழத் தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் வெளியார் என்பது முதல் பார்வையில் இந்தியா மட்டும்தான். அதற்கு பின்னர்தான் ஏனைய வெளியார்கள். இந்த விடயத்தில் முக்கியத்துவம் பெற முடியும். ஆனால், இந்தியா 1987 இலிருந்து ஒரு விடயத்தையே தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. அதாவது, 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபை முறைமை.

இலங்கை தமிழ் மக்களின் விவகாரம் என்று வரும்போதெல்லாம் புதுடில்லி இதனை உச்சரித்து வருகின்றது. இந்த விடயத்தில் காங்கிரஸ் மற்றும் பாரதிய ஜனதா என்னும் வேறுபாடுகள் இல்லை. உண்மையில் இதற்கு அப்பால் விடயங்களை வலியுறுத்தும் தேவையோ, அவசியமோ இந்தியாவை பொறுத்தவரையில் இதுவரையில் ஏற்படவில்லை. இந்த நிலையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை - மாகாண சபையை முற்றிலுமாக நிராகரித்து, புதுடில்லியிடம் ஈழத் தமிழ் தலைவர்களால் ஒருபோதுமே செல்ல முடியாது. அவ்வாறு செல்வதால் எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை. எனவே, முதலில் 13, மற்றும் மாகாண சபை முறைமையும் தேவை என்பதில், தமிழ் தலைவர்கள் என்போர் ஓர் உறுதியான நிலைப்பாட்டிற்கு வந்தேயாக வேண்டும். இல்லையென்றால் இந்தியாவிடம் செல்லுதல் என்பதை மறக்க வேண்டும். ஆனால், இந்தியாவை தவிர்த்து இப்போதிருக்கின்ற உலகச் சூழலில் ஈழத் தமிழர்களால் எங்கும் பயணிக்க முடியாது.

தற்போது நிலைமை மேலும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது. இதுவரை இந்தியா மட்டும் உச்சரித்துக் கொண்டிருந்த விடயம் சர்வதேச அரங்கிலும் பேசப்படுகின்றது. இறுதியாக இலங்கையின் மீது நிறைவேற்றப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலும். அரசியல் தீர்வின் அடிப்படையாக 13ஆவது திருத்தச்சட்டம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் வெளியாரின் அனுசரணைகளை, தலையீடுகளை வரவேற்கும், கோரும் தமிழ்த் தலைமைகள் என்ன செய்ய முடியும்? இந்த நிலைமையை சாதாரணமாகத் தள்ளிவிட்டு பயணம் செய்ய முடியுமா? அந்த வகையில் 13இல் அனைத்து கட்சிகளும் கருத்துதொருத்து, இணக்கத்திற்கு வரவேண்டியது கட்டாயமாகும். இங்கு தமிழர்களின் அல்லது தமிழ் கட்சிகளின் விருப்பம் என்பதல்ல விடயம். நமக்கு முன்னால் எவ்வாறான சூழல் விரிந்து கிடக்கின்றது? அங்கு நமக்கான இடம் என்னவாக இருக்கின்றது என்பதுதான் முக்கியமானது.

# இணையவழி இணைந்த தமிழ் தேசிய கட்சிகள்!

- அலசுவது இராஜதந்திரி -

இணையவழி மூலமாக தமிழ்த் தேசியக் கட்சிகள் தம்மிடையே மூன்றரை மணிநேரம் நேற்று முன்தினம் பேச்சு நடத்தியுள்ளன. இன்றைய கோவிட் - 19 நிலவரத்தை கருத்தில்கொண்ட நிலையில் ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் இணையவழி மூலமாக தம்மிடையே கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தமாக பேச்சுகளை நடத்தியிருந்தன.

இப்பேச்சுகளில் தமிழ் அரசுக் கட்சி தலைவர், மாவை சேனாதிராசா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி தலைவர் சி. வி. விக்னேஸ்வரன், ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறிகாந்தா ஆகியோரே இணையவழி பேச்சில் பங்குபற்றியிருந்தனர்.



ஒரு வாரத்துக்கு முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புதிய அரசியலமைப்பொன்றின் அவசியத்தை வலியுறுத்தி கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்நதார்.

**வரவேற்புக்குரியது**

இதனையடுத்து தற்போது ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் இணையவழி மூலமாக தம்மிடையே பேச்சுகளை நடத்தி யுள்ளன. நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகள் இவ்வாறு தம்மி டையே பேச்சுகளை நடத்தியுள்ளளமை வரவேற்புக்குரியதாக இருக்கின்றது. ஏனெனில், நீண்ட காலமாக வடக்கு - கிழக்கு அரசியல் மற்றும் மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தமாக எவ்வித பேச்சுகளும் இடம்பெறாதிருந்தது. இத்தகைய சூழ்நிலையிலேயே தற்போது ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தன.

ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் பேச்சு காலமறிந்த ஒன்றாகவே இருக்கின்றது. ஏனெனில், எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் பெரும்பாலும் இணையவழி மூலமாக பங்குபற்றக்கூடும் என்றே எதிர்பார்க்க முடிகின்றது.

அத்துடன், எதிர்வரும் ஜெனிவா கூட்டத் தொடரில் தமது நிலைப்பாடு தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டுக்கு கடிதமொன்றையும் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனுப்பிவைத்துள்ளன.

இதேவேளை, இணையவழி பேச்சுக்களை நடத்திய ஐந்து தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் அரசியல் கட்சிகளின் விடுதலை, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல், நில அபகரிப்பை தடுத்து நிறுத்துதல், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துதல் என்பவை பற்றியும் தம்மிடையே இணக்கப்பாட்டை எட்டியுள்ளன.

**தென்னிலங்கை அரசியல் நிலவரம்**

இன்றைய தருணத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளைப் பொறுத்தவரை ஒத்திசைவான போக்குடன் நடந்து கொள்வதே நல்ல அரசியல் மதியூகமாக அமைய முடியும். ஏனெனில், இன்றைய ஜனாதிபதி கோட்டாபய அரசாங்கம் தற்போது பல தவறான முடிவுகளை எடுத்து தென்னிலங்கையில் ஏறத்தாழ ஆட்டங்கண்ட நிலையிலிருப்பதையே அவதானிக்க முடிகின்றது. அரசுக்குள்ளேயே உட்பூசல்கள் காணப்படுகின்றன என்பதையே அறிய முடிகின்றது.

இந்நிலையில் அரசுக்குள் நிலவுகின்ற நெருக்கடி நிலையிலிருந்தும் நாட்டு மக்களை திசைதிருப்ப வடக்கு - கிழக்கு பிரச்னையை தனக்கேற்றாற்போல இன்றைய ஆட்சியாளர்கள் கையாளவும் முடியும். இதன் காரணமாகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் மிக அவதானமாக தமது அரசியல் நகர்வுகளை ஒற்றுமை பேணி முன்னனெடுக்க வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பரில் தமிழ்த் தேசியக் கட்சிகள் வடக்கு - கிழக்கின் அரசியல் - மனிதாபிமான பிரச்னைகள் தொடர்பாக நிச்சயம் ஜெனிவாவில் இடித்துரைத்து இதுவரை நிறைவேற்றப்படாதுள்ள மனிதாபிமான பிரச்னைகள் சம்பந்தப்பட்ட பிரேரணைகளை நிறவேற்றவேண்டுமென்றே வலியுறுத்துபவையாக இருக்கும்.

இதுகுறித்து அரசாங்கமும் தனது அரசியல் நகர்வுகளை ஜெனிவாவில் போலி வாக்குறுதிகளை வழங்கி முன்னனெடுக்கவும் முடியும். எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒற்றுமை பேணி இந்தியாவை பக்க பலமாக கொண்டிருந்து 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கத்துக்கு மேலும் வலுச்சேர்ப்பதே சரியான அரசியல் நகர்வாக இருக்க முடியும். ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 24 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 08
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 3.00 - 4.30
திதி : துவிதியை




**மேடம்**
எதிர்பாராத நற்செய்தி மாலை நேரத்துக்குப் பிறகு வரும். பெண்களுக்கு ஆன்மிகப் பணிகள் செய்யும் வாய்ப்பு தேடிவரும். ஆரோக்கியத்தில் அக்கறையின்றி அலட்சியம் காட்ட வேண்டாம்.

**இடபம்**
நிறைய முயற்சி செய்து புதிய விஷயம் தொடங்குவீர்கள். பணியாளர்களுக்கு கேட்ட இடத்திற்கு இடமாற்றம் கிடைக்கும். விவாதத்தால் மனக்கசப்பு வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**மிதுனம்**
வெளிவட்டாரத்தில் உங்கள் மேலிருந்த மரியாதை கூடும். குடும்பத்தினருடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். பழைய நட்பு, சொந்தங்கள் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**கடகம்**
புதிய முயற்சிகள் வெற்றி பெறும். மனக்குழப்பம் மறையும். அநாவசியக் குழப்பத்தினால் தவறு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள். எவரையும் அலட்சியம் செய்துவிட்டு பிறகு வருந்த வேண்டாம்.

**சிம்மம்**
தன்னம்பிக்கை அதிகரிப்பதால் செயல்களில் நேர்த்தி இருக்கும். நண்பர், உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். ஆன்மீகத்தில் ஆர்வம் கூடும்.

**கன்னி**
நிதி நிலைமையில் எந்த வித மாறுதலும் இருக்காது. மனஅமைதி மீளும். உடல்நலத்தில் இருந்த பிரச்னை தீரும். மற்றவர் பொறுப்பை ஏற்க வேண்டாம். தீயோர் தொடர்பு கூடாது.

**துலாம்**
வாழ்க்கைத் துணைவரால் நலம் உண்டாகும். மகிழ்ச்சி கூடும். வியாபாரிகள் கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருக்கவும். பணியாளர்கள் ஏற்றம் பெறுவார்கள். வியாபார வளர்ச்சி உண்டு.

**விருட்சிகம்**
பண வரவு ஓரளவு சிறப்பாக அமையும். நிம்மதி உண்டு. பிரச்னை ஒன்று தீரும். பணிச்சுமை சிரமம் தரலாம். புதிய வாகனம் வாங்குவீர்கள். வீட்டுப் பராமரிப்பில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு**
பல நாட்களாக எதிர்பார்த்த அதிர்ஷ்ட வாய்ப்பு வரும். குடும்பத்தினருடன் இருந்த கருத்து வேறுபாடுகளை நீக்குவீர்கள். உறவினர்களுக்கு ஏற்பட்ட தொல்லையை அகற்றுவீர்கள்.

**மகரம்**
பழைய சொத்துக்களை சுமார் விலைக்கு விற்பீர்கள். வாகனம், வீடு பராமரிப்புச் செலவுகள் அதிகமாகும். கலைத்துறையில் ஈடுபடுவது பற்றிய ஆர்வம் வரும்.

**கும்பம்**
கலைத்துறையினர் வளர்ச்சி காண்பர். நட்பு வட்டம் விரியும். புதிய பொருள் வாங்குவதால் சந்தோஷமும் திருப்தியும் கிடைக்கும். வாகனங்களால் முன்பிருந்த செலவு குறையும். லாபம் வரும்.

**மீனம்**
வேறு மதத்தினரின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். சகபணியாளர்கள் ஒத்துழைப்பர். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிநாட்டுத் தொடர்பு மூலம் வருமானம் காண்பீர்கள்.

# தொடர்ந்தும் உழைத்தால் தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைக்க முடியும்!

## மாநில தலைவர் அண்ணாமலை நம்பிக்கை

சென்னை, ஓக. 24

"தொடர்ந்து உழைத்தால் தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமையும்" - என கட்சியின் உள்ளாட்சி தேர்தல் ஆலோ சனை கூட்டத்தின் போது பா.ஜ.கவின் தமிழக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் 9 மாவட்டங்களுக்கான உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெற உள்ள நிலையில் தேர்தலுக்கு தயாராவது தொடர்பாக பா.ஜ..க மாவட்ட தலைவர்களுடன் மாநில தலைவர் அண்ணாமலை ஆலோசனை நடத்தினார். சென்னை தி.நகரில்



உள்ள பா.ஜ.க. அலுவலகத்தில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் அனைத்து மாவட்ட தலைவர்களும், மாநில நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

இந்த கூட்டத்தில் பேசிய அண்ணாமலை, "வரும் உள்ளாட்சித் தேர்தலில் அதிக இடங்களில் பா.ஜ.க. கூட்டணி கட்சிகள் கைப்பற்ற வேண்டும் பாராளுமன்ற தேர்தல், சட்டமன்றத் தேர்தல், வேல் யாத்திரை என தொடர்ச்சியாக ஓய்வின்றி கட்சி பணி செய்தது போல் வரும் உள்ளாட்சி தேர்தலிலும் அதே வேகத்தோடு உழைக்க வேண்டும் தொடர்ந்து உழைத்தால் தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி அமையும்" என்றும் அண்ணாமலை நிர்வாகிகளுக்கு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# கொடநாடு விவகாரத்தில் மறு விசாரணையல்ல மேலதிக விசாரணைதான் செய்யப்படுகின்றது!

## தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு விளக்கம்

சென்னை, ஓக. 24

கொடநாடு விவகாரம் மறு விசாரணை செய்யப்படவில்லை, மேலதிக விசாரணை தான் செய்யப்படுகிறது என தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

கொடநாடு விவகாரம் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது: "ஜெயலலிதா மரணம் தொடர்பான விசாரணை நிலவரம் என்ன? என்று மக்கள் கேட்கின்றனர். குற்றம்சாட்டப்பட்டவரிடம் நீதிமன்றத்தில் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது. கொடநாடு விவகாரம் பற்றி முரண்பாடாக ஜெயக்குமார் பேசுகிறார். கோடநாடு விவகாரம் பற்றி முதலில் பேசியது அ.தி.மு.கவினர்தான். கோடநாட்டில் நடந்தது சாதாரண சம்பவம் அல்ல. கோடநாடு விவகாரம் பற்றி ஜெயக்குமார் பதற்றத்தில் பேசுகிறார்.

சட்டம் ஒழுங்கு விவகாரம் பற்றி முதல்வர் பேசக் கூடாது என ஜெயக்குமார் சொல்வது வேடிக்கையானது. சட்டப்பேரவையில் கொடநாடு விவகாரத்தை கொண்டு வந்தது அ.தி.மு.க தான். கொடநாடு விவகாரம்



மறு விசாரணை செய்யப்படவில்லை, மேலதிக விசாரணை தான் செய்யப்படுகிறது" - என அவர் தெரிவித்தார்.

# மதுரை ஆதீனமாக புதியவர் பொறுப்பேற்றார்

மதுரை, ஓக. 24

மதுரை ஆதீன மடத்தின் 293ஆவது புதிய ஆதீனமாக ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் நேற்று பொறுப்பேற்று கொண்டார்.

மதுரை ஆதீன மடத்தின் 292வது ஆதீனமாக இருந்த அருணகிரிநாதர் மறைவை அடுத்து, புதிய ஆதீனமாக ஹரிஹர ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அறிவிக்கப்பட்டார். இந்த நிலையில், புதிய ஆதீனம் பொறுப்பேற்கும் நிகழ்ச்சி நேற்று



நடந்தது. புதிய ஆதீனம் பதவியேற்பு நிகழ்ச்சியில், தமிழகத்தில் உள்ள அனைத்து தருமபுரம் ஆதீனங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இளைய சந்நிதானமாக ஹரிஹர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளை அருணகிரிநாதர் நியமித்தார். மதுரை ஆதீனத்தின் இளைய ஆதீனம் சுந்தரமூர்த்தி தம்பிரான் 293ஆவது ஆதீனமாக தேசிக பரமாச்சாரிய சுவாமிக்கு பட்டம் சூட்டினார்.

# கருணாநிதி, பேராசிரியர், மறைவுக்கு பின் வழிகாட்டியாக இருப்பவர் துரைமுருகன்

## ஸ்டாலின் உரை; கண்கலங்கிய துரைமுருகன்

வென்னை, ஓக. 24

"தமிழக சட்டப்பேரவையில் 50 ஆண்டுகள் பங்கேற்று பொன்விழா நாயகனாக வலம் வருகிறார் துரைமுருகன்" -என்று கூறி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டிபேசுகையில் துரைமுருகன் கண்கலங்கினார்.



மூன்றுநாள் விடுமுறைக்குப் பின்னர் தமிழக சட்டப்பேரவை நேற்று கூடியது. இதன்போது துரை முருகனைப் பாராட்டும் தீர்மானத்தைக் கொண்டுவந்து உரையாற்றிய ஸ்டாலின், "நூற்றாண்டு சட்டப்பேரவையில், அரை நூற்றாண்டுக்கு முன்னர் வந்தவர் துரைமுருகன். தனிப்பட்ட முறையில் சொல்ல வேண்டும் என்றால் கருணாநிதி, பேராசிரியர், மறைவுக்குப் பிறகு எனக்கு வழிகாட்டியாக இருந்து கொண்டிருப்பவர் துரைமுருகன். மனதில் பட்டதை பேசக்கூடியவர்.

அவரை கலைஞர், பேராசிரியர் இடத்தில் வைத்து பார்க்கிறேன். கருணாநிதி, துரை துரை என்று அழைப்பார். அவர்கள் இருவரும் பேசினால் மணிக்கணக்கில் பேசுவார்கள். சட்டப்பேரவையில் 50 ஆண்டுகள் பங்கேற்று பொன்விழா நாயகனாக வலம் வருகிறார். பொன்விழா நாயகனாகத் திகழ்கிறார் துரைமுருகன்" என்று கூறி, பொன்விழா நாயகன் துரைமுருகனுக்கு பாராட்டு தெரிவித்து தீர்மானம் கொண்டு வந்தார் ஸ்டாலின். அப்போது, பாராட்டு தீர்மானத்தில் ஸ்டாலின் பேசியதை கேட்டு கண்கலங்கினார் துரைமுருகன்.





# ஊரடங்கு உத்தரவைமீறி போகாவத்தையில் பூசை

## சுகாதார நடைமுறைகளும் மீறல்

கொழும்பு, ஓக. 24

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில் அச்சட்டத்தையும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளையும் அப்பட்டமாகமீறி ஆன்மீக வழிபாட்டில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது என சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கொட்டகலை சுகாதார பிரிவுக்குட்பட்ட திம்புள்ள, போகாவத்தை தோட்டத்திலுள்ள கோவிலிலேயே நேற்று முன் தினம் மாலை இப்பூசை வழிபாடு இடம்பெற்றுள்ளது.

பூசையில் பங்கேற்றவர்கள் சமூக இடைவெளியை மறந்து செயல்பட்டதுடன், முகக்கவசத்தைக்கூட முறையாக அணிந்திருக்கவில்லை.

எனவே, கோவிலின் நிர்வாக சபைக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# வெதுப்பக உற்பத்திகளின் விலைகளில் மாற்றமில்லை!

கொழும்பு, ஓக. 24

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்காது தொடர்ந்தும் அதே விலையில் விற்பனை செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிமாகாண வெதுப்பக உரிமையாளர் சங்கம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

அதன் இணைப்பாளர் காமினி கந்தேகெதர இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலையையும், பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியத்தையும் கருத்திற்கொண்டு தற்காலிகமாக வெதுப்பக உற்பத்தி பொருள்களின் விலையை அதிகரிக்காதிருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த காலப்பகுதியில் புரிந்துணர்வு அடிப்படையில் சகல வெதுப்பக உரிமையாளர்களும் இணைந்து பயணிக்குமாறும் அவர் கூறினார்.

பாண் ஒன்றின் விலையை 5 ரூபாயாலும், சகல வெதுப்பக உற்பத்தி பொருள்களை 10 ரூபாயாலும், கேக் கிலோவொன்று 100 ரூபாயாலும் நேற்று முதல் அதிகரிப்பதற்கு தீர்மானித்ததாக அகில இலங்கை வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதுகெலும்பற்றவர்கள்!

## பங்காளிக்கட்சி தலைவர்கள் மீது பொதுஜன பெரமுன கட்சி சீற்றம்



**கொழும்பு, ஓக.24**

**“அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு இணக்கம் தெரிவித்துவிட்டு, முதுகெலும்பற்றவர்கள் வெளியில் வந்து அறிக்கைகளை விடுத்து மாபெரும் வீரர்கள் ஆவதற்கு முயற்சிக்கவேண்டாம்.” - என்று பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி.**

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்தி நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக நாட்டை இரு வாரங்களுக்கு முடக்குமாறு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 10 பங்காளிக் கட்சிகள் கூட்டறிக்கை விடுத்திருந்தன.

இந்நிலையில் பங்காளிக்கட்சிகளின் இந்த செயல்பாட்டை கடுமையாக விமர்சித்த மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம், கூட்டு பொறுப்பை மீறும் செயல் எனவும் சாடினார்.

அமைச்சரவையில் கதைப்பதற்கு முதுகெலும்பற்றவர்கள், வெளியில்வந்து ஊடகங்களுக்கு அறிக்கைவிடுத்து வீரர்களாவதற்கு முயற்சிக்கின்றனர்.

இது கூட்டணி அரசுக்கு பொருத்தமற்ற செயலாகும் எனவும் கடும் விசனத்தை வெளியிட்டார் மொட்டு கட்சியின் செயலாளர்.

எனவே, இது தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என கட்சியின் சார்பில் கோரிக்கையையும் முன்வைத்தார்.

# சிறை மருத்துவருக்கு ரிஷாத் அச்சுறுத்தல் சிறைச்சாலை திணைக்களமும் விசாரணை

கொழும்பு, ஓக. 24

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சிறைச்சாலை மருத்துவர் ஒருவருக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறைச்சாலை திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.மேலதிக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தலைமையிலேயே இந்த விசாரணை முன்னெடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தனக்கு மரண அச்சுறுத்தல் விடுத்தார் எனத் தெரிவித்து சிறைச்சாலை மருத்துவர் ஒருவர் பொரளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

“சிறைச்சாலையில் கடந்த 15 ஆம் திகதி ஆம் திகதி நோயாளி ஒருவரை பரிசோதித்துக் கொண்டிருந்தேன். அப்போது ரிஷாத் பதியுதீன் பலவந்தமாக உள்ளே நுழைந்தார். அவரை வெளியில் நிற்குமாறு கூறினேன்.

இதனையடுத்தே ரிஷாத் பதியுதீன் மரண அச்சுறுத்தல் விடுத்தார். எனக்கு தேவையான மருத்துவர் ஒருவரை இங்கு கொண்டுவர முடியும். உம்மை மாற்றவும் முடியும். வேறு உலகுக்கு அனுப்பவும் முடியும். உமக்கு ஆயுள் குறைவு. நீ கவனமாக இருந்துக்கொள்.” என கடும் ஆவேசத்துடன் ரிஷாத் பதியுதீன் மிரட்டினார் என குறித்த மருத்துவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சிறைச்சாலையின் பிரதான மருத்துவரிடமும், அதிகாரியிடமும் சம்பந்தப்பட்ட மருத்துவர் முறையிட்டுள்ளார். அதன்பின்னரே பொரளை பொலிஸ் நிலையம் சென்றுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாகவே சிறைச்சாலை திணைக்களமும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

# ‘76,000 பைசர் தடுப்பூசிகள் வந்தன

கொழும்பு, ஓக. 24

76 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.பெல்ஜியத்திலிருந்து இவை கொண்டு வரப்பட்டன என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தா பனத்தின் பொது முகாமையாளர் தினுஷ திசாநாயக்க குறிப்பிட்டார்.

# வரணியில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஓக. 24

வரணி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இன்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனைகளில் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு வரணியில் உள்ள மதுபான உற்பத்திச் சாலையில் பணியாற்றும் சிலருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனை அடுத்து அவர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தனிமைப்படுத்தப் பட்டிருந்தனர்.

இந்நிலையில் வரணி மத்தி, வரணி, மாசேரி, கறுக்காய் உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 79 பேருக்கு அன்ரிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டி ருந்தது.

அவர்களில் 26 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 7000 பேர் தடுப்பூசி பெறவில்லை!

## கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த நிலை

கிளிநொச்சி மாவட்டத்தில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் 7,000 பேர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளவில்லை என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சரவணபவன் தெரிவித்துள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கான நடமாடும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்த பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று நடமாடும் தடுப்பூசி செலுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் 18 ஆயிரம் பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்கின்றனர்.

அவர்களில் ஏறத்தாழ 11 ஆயிரம் பேர் மாத்திரமே தடுப்பூசி பெற்றுள்ளனர். மிகுதியான 7 ஆயிரம் பேர்வரை தடுப்பூசி போடாமல் இருக்கின்றார்கள்.

தடுப்பூசி திட்டம் ஒரு மாத காலம் நீடித்தும் அவர்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்கு வேறு வேறு காரணங்கள் இருக்கலாம்.

இந்த நிலையில் நேற்றிலிருந்து ஒரு வார காலத்துக்கு அவர்களின் வீடுகளுக்கு சென்று இராணுவத்தினரின் உதவியுடன் தடுப்பூசிகளை செலுத்தவுள்ளோம்.

மாவட்டத்தில் விடுபட்டுள்ள 7000 பேருக்கும் தடுப்பூசியை செலுத்தும்வரை இத்திட்டம்முன்னெடுக்கப்படும்-என்றார்.

# ஊடகவியலாளரிடம் சி.ஐ.டி. விசாரணை

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பொருளாளரும் ஊடகவியலாளருமான புண்ணியமூர்த்தி சசிகரன் நேற்று மட்டக்களப்பு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியலய விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

நேற்று காலை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் உள்ள விசேட குற்றத்தடுப்பு பிரிவுக்கு அழைக்கப்பட்டு இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

நேற்று காலை 9.30மணி தொடக்கம் 11.30மணி வரையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு கடலில் கொல்லப்பட்ட இந்திய மீனவர்களுக்கு அஞ்சலி நிகழ்வு நடத்தப்பட்டமை குறித்து தம்மிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாக புண்ணியமூர்த்தி சசிகரன் தெரிவித்தார். ஊடகவியலாளர்கள் சுதந்திரமான தமது கடமையினை செய்யும் நிலைமையை ஏற்படுத்த ஜனாதிபதி முன்வர வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களின் சம்பளம்

கொழும்பு, ஓக. 24
கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கான மருத்துவ செலவுக்காக தமது இந்த மாத சம்பளத்தை நன்கொடையாக வழங்க ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.
கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.
அதனடிப்படையில் விஷேட நிதித்திட்டம் ஒன்றை உருவாக்கி அதனூடாக இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அவர் கூறினார்.

# ஒட்சிசன் ஏற்றிவர மீண்டும் இந்தியா செல்லும் 'சக்தி'

கொழும்பு, ஓக. 24
இந்தியாவிலிருந்து மற்றொரு தொகுதி மருத்துவ ஒட்சிசனை ஏற்றி வருவதற்காக இலங்கை கடற்படை கப்பல் (எஸ்.எல். என்.எஸ்) சக்தி, சென்னை துறைமுகத்தை நோக்கி இன்று புறப்பட உள்ளது.
முன்னதாக ஓகஸ்ட் 17 ஆம் திகதி திருகோணமலை துறை முகத்திலிருந்து சென்னை துறை முகத்துக்கு புறப்பட்ட இந்தக் கப்பல், இந்தியாவிலிருந்து 40 தொன் மருத்துவ ஒட்சிசனை ஏற்றிக் கொண்டு நேற்று முன் தினம் நள்ளிரவில் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

# நடமாடும் வர்த்தகர்களுக்கு தடுப்பூசி ஏற்றல் கட்டாயம்!

கொழும்பு, ஓக. 24
சுற்றுலாத்துறையில் உள்ள அனைத்து வழிகாட்டிகள் மற்றும் நாட்டில் உள்ள நடமாடும் விற்பனையாளர்கள் கொரோனா தடுப்பூசி போடவேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.
இந்த தரப்புகளுக்கு தடுப்பூசியை கட்டாயமாக்குவதன் மூலம், வைரஸ் பரவுவதை ஓரளவுக்கு கட்டுப்படுத்த முடியும் என்று பொது சுகாதார ஆய்வாளர் சங்கத் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.
கடமைகளைச் செய்யும் போது அதிக ஆபத்தில் இருக்கும் அனைத்து பிரிவுகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்று அவர் கூறினார்.
அத்தியாவசிய சேவைகளின் கீழ் வேலைக்குச் செல்லும் அனைத்து நபர்களும் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அத்தியாவசிய சேவைகளைச் செய்யும்போது குறைந்தபட்ச ஊழியர்களை வேலைக்கு அழைக்கவேண்டும், அதே நேரத்தில் சீரற்ற பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்டிஜென் சோதனைகளும் நடத்தப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.
சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப் பிடிக்கவேண்டும். இதனை கண்காணிக்கத் தவறுவது தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் மூலம் பேரழிவிற்கு வழிவகுக்கும் என்றார்.
தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு காரணமாக தினசரி வருமானத்தை இழந்தவர்களுக்கு சலுகைகளை வழங்க நன்கொடையாளர்கள் முன்வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.
தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப் பட்டதால், தினசரி ஊதியம் பெறுபவர்களில் ஒரு பெரிய பகுதியினர் கடுமையான சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாக உபுல் ரோஹன கூறினார்.
எனவே, அனைவரும் அத்தகைய நபர்களை எந்த வகையிலேனும் ஆதரிக்குமாறு அவர் கோரினார். தேவைப்பட்டால் அது பகுதி சுகாதார பரிசோதகர்கள் மூலம் ஒருங்கிணைக் கப்படலாம் என்று கூறினார்.
தொற்றுநோய்க்கு மத்தியில் உயிர்களைக் காப்பாற்ற ஊரடங்கு உத்தரவு அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.
ஊரடங்கு உத்தரவு காரணமாக எந்த ஒரு தனிமனிதனும் சிரமத்துக்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யுமாறு அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டார்.

# அத்தியாவசிய உணவு பெற சிரமமான நாடுகளின் பட்டியலில் இலங்கையும்!

## பொதுஜன பெரமுனவின் எம்.பி. தகவல்



**கொழும்பு, ஓக.24**
**உலகில் அத்தியாவசிய உணவுகளை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதல் 5 இடங்களுக்குள் காணப்படுவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.**
அக்மீமன பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
தற்போது நாடு மிகவும் பொருளாதார நெருக்கடியில் இருப்பதாகவும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் உலகில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது "அபி வவமு ரட நகமு" போன்ற வேலைத் திட்டங்களின் ஊடாக அதற்கு தீர்வு காணப்பட்டது என்றும்,
ஆனால், இன்று அவ்வாறான ஒரு திட்டங்கள் இருப்பதாக தெரியவில்லை எனவும் ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சந்திம வீரக்கொடி குறிப்பிட்டார்.
(அ)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கை மூன்று வாரங்களுக்கு நீடியுங்கள்

## அரசை வலியுறுத்துகிறது தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, ஓக. 24
இலங்கையில் நிலவும் சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு நாடளாவிய ரீதியில் அமுலில் உள்ள ஊரடங்கு உத்தரவு போதுமானதாக இருக்காது என தேசிய மக்கள் சக்தி செயலாளர் மருத்துவர் நிஹால் அபேசிங்க தெரிவித்துள்ளார்.
எனவே, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு செவி சாய்த்து, தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மூன்று வாரங்களுக்கு நீடிக்குமாறும் அவர் வலியுறுத்தினார்.
இதேவேளை, நோயாளிகளின் எண்ணிக்கை, இறப்புகள், வைத்தியசாலையில் அனுமதிக் கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை, வைத்தியசாலை



களின் இடவசதி மற்றும் வைரஸின் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பயணக் கட்டுப்பாடுகளின் காலம் தீர்மானிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.
கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த தடுப்பூசி மட்டும் தீர்வு அல்ல, 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உடனடியாக தடுப்பூசி செலுத்துவதற்கு பதிலாக அதிக எண்ணிக்கையிலானவர்களுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு அரசு விரைந்திருப்பதே அதிக எண்ணிக்கையிலான இறப்புகளுக்கு காரணம் என அவர் சுட்டிக் காட்டினார்.
அத்துடன், தற்போதைய சூழ்நிலையை எதிர்கொள்ள, மூன்று வாரங்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு நிபுணர்கள் பரிந்துரைத்தனர். இந்நிலையில் மேலும் 10 நாட்கள் முடக்கத்தை நீடிப்பது குறித்து அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என மருத்துவர் நிஹால் அபேசிங்க வலியுறுத்தினர்.

# கொரோனாவால் உயிரிழப்போரில் அதிகமானோருக்கு நிமோனியா!

கொழும்பு, ஓக. 24
கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்பவர்களில் 30 வீதமானவர்கள் நிமோனியா நிலைமையினால் உயிரிழப்பதாக விஷேட சட்ட மருத்துவர் சன்ன பெரேரா தெரிவித்துள்ளார்.
கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையிலேயே இந்த விடயம் குறித்து தெரியவந்துள்ளதாக அவர் கூறினார்.
அதன்படி, இதுவரை 100இற்கு அதிகமான கொரோனா சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பட்டாணிச்சூர் பகுதியில் வீட்டில் உயிரிழந்த முதியவருக்கு தொற்று

வவுனியா, ஓக. 24
வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் வீட்டில் உயிரிழந்த முதியவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.அந்த முதியவர் நேற்று முன் தினம் சுகவீனம் காரணமாக அவரது வீட்டில் மரணமடைந் திருந்தார்.
இந்நிலையில் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதன் முடிவுகளின் படி அவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
சம்பவத்தில் 61 வயதான முதியவரே மரணமடைந்துள்ளார். அவர் வவுனியா வைத்தியசாலை சிற்றூழியராக பணியாற்றி ஓய்வுபெற்றவர் என தெரிவிக்கப்பட்டது.

# வவுனியா கிராமசேவகருக்கு கொரோனா தொற்று உறுதி

வவுனியா, ஓக. 24
வவுனியா கனகராயன்குளம் வடக்கு கிராமசேவகருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அந்த பெண் கிராமசேவக ருக்கு காய்ச்சல் இருந்த நிலை யில் புளியங்குளம் பிரதேச வைத் தியசாலையில் அன்ரிஜென் பரிசோதனை முன்னெடுக்கப் பட்டது.
இதன்போது அவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.
இதனையடுத்து அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் மற் றும் அங்கு பணி புரியும் சில உத்தியோகத்தர்களுக்கு கொரோனா தொற்று அண்மையில் உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா நோயாளர்களால் நிரம்பிய ஐ.சி.யூ. கட்டில்கள்!

## சகல வைத்தியசாலைகளிலும் நெருக்கடி

**கொழும்பு, ஓக.24**

**நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட தீவிர சிகிச்சை பிரிவுகள் தொற்றாளர்களால் நிரம்பிவிட்டன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.**

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் சுமார் 186 தீவிர சிகிச்சை பிரிவுகள் கட்டில்கள் கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், தற்போது அவை பற்றாக்குறையாக காணப்படுவதனால் ஏனைய நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்ட 86 தீவிர சிகிச்சை பிரிவுக் கட்டில்களும் தற்போது கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.



# இந்திய தூதுவர்- பீரிஸ் பேச்சு

கொழும்பு, ஒக. 24

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லேயுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸூக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகளுக்கு இந்தியாவிடமிருந்து கிடைக்கும் தொடர்ச்சியான ஒத்துழைப்புகளுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நன்றி தெரிவித்தார் என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பலை பயன்படுத்தி இலங்கைக்கான ஒட்சிசனை அனுப்பி வைத்தமைக்கும் இதன்போது அமைச்சர் தமது நன்றி தெரிவித்துள்ளார்.

### நுவரெலியா வைத்தியசாலையில்

# மருத்துவர்கள் உள்ளிட்ட 23 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஒக. 24

நுவரெலியா பொது வைத்தியசாலையில் மருத்துவர்கள் உள்ளிட்ட 23 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

மருத்துவர்கள் 3 பேர், தாதியர்கள் 13, கனிஷ்ட பிரிவு ஊழியர்கள் 7 பேர் என மொத்தமாக 23 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான மருத்துவர்கள், தாதியர் உள்ளிட்ட கனிஷ்ட ஊழியர்கள் சிலர் வைத்தியசாலையின் கொரோனா விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

குறைந்த அறிகுறிகள் உள்ள சிலர் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக வைத்தியசாலையில் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும், எவ்வாறாயினும் தற்போதுள்ள மருத்துவர்கள், தாதியர்களைக் கொண்டு பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாகவும் அவர் கூறினார்.



# தேறி வருகிறார் மங்கள

கொழும்பு, ஒக. 24

கொரோனா தொற்றுக்குள்ளான முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர ஆபத்தான நிலையில் இருந்து மீண்டு வருகிறார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர் தற்போது கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த காலங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மங்கள சமரவீரவின் உடல்நிலை தொடர்பில் சமூக வலைத்தளங்களில் உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொல்லால் தாக்கப்பட்டு பெண்ணொருவர் கொலை

கொழும்பு, ஒக. 24

வெலிமடை - மெதஹின்ன பிரதேசத்தில் பொல்லொன்றினால் தாக்கி பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கந்தேஹெல கொடகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதான பெண் ஒருவரின் சடலம் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண் 33 வயதான நபர் ஒருவருடன் தவறான உறவைப் பேணி வந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் அந்நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

அத்துடன், இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் காரணமாக பெண் கொலை செய்யப்பட்டார் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் அம்பகஸ்தோவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிக்குவின் வாகனத்தில் இருந்து 25 மதுபான போத்தல்கள் மீட்பு

கொழும்பு, ஒக. 24

கண்டியிலுள்ள பிரபல விகாரையின் பிக்கு ஒருவருக்குச் சொந்தமான அதிசொகுசு வாகனத்தில் இருந்தும், வர்த்தகர் ஒருவரின் வாகனமொன்றிலிருந்தும் 145 மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக மெனிக்ஹின்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பிக்குவின் வாகனத்திலிருந்து 25 மதுபானப் போத்தல்களும் வர்த்தகரின் வாகனத்திலிருந்து 120 மதுபானப் போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பத்து நாள்களுக்கு நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், ஊரடங்கு காலத்தில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, இவ்வாறு மதுபானங்கள் கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, கைது செய்யப்பட்ட வர்த்தகருக்கு சொந்தமாக மதுபானசாலையொன்று இருக்கின்றமையும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

# யாழில் கொரோனாவுக்கு ஒரே வாரத்தில் 20 பேர் பலி

## மொத்த உயிரிழப்பு 200 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழப்பவர்களது எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 20 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

யாழ். மாவட்ட செயலகத்தின் கோவிட்-19 புள்ளி விவர அறிக்கையின் அடிப்படையில் இவ்விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், ஒகஸ்ட்-16 முதல் 22 வரையிலான 07 நாட்களில் இவ்வாறு 20 கோவிட்-19 மரணங்கள் யாழ். மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

ஒகஸ்ட் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் பதிவாகியுள்ள கோவிட் மரணங்கள் தொடர்பான விவரம்:-

ஒகஸ்ட் - 02 - 04 பேர், ஒகஸ்ட் - 03 - 02 பேர், ஒகஸ்ட் - 04 - 02 பேர், ஒகஸ்ட் - 06 - 02 பேர், ஒகஸ்ட் - 07 - 03 பேர், ஒகஸ்ட் - 08 - 03 பேர், ஒகஸ்ட் - 09 - 03 பேர், ஒகஸ்ட் - 10 - 06 பேர், ஒகஸ்ட் - 11 - 05 பேர், ஒகஸ்ட் - 12 - 04 பேர், ஒகஸ்ட் - 13 - 05 பேர், ஒகஸ்ட் - 14 - 07 பேர், ஒகஸ்ட் - 15 - 03 பேர், ஒகஸ்ட் - 16 - ஒருவர், ஒகஸ்ட் - 17 - 02 பேர், ஒகஸ்ட் - 18 - 06 பேர், ஒகஸ்ட் - 19 - ஒருவர், ஒகஸ்ட் - 20 - 05 பேர், ஒகஸ்ட் - 21 - 03 பேர், ஒகஸ்ட் - 22 - 02 பேர்

இதன் மூலம் இந்த மாதத்தின் முதல் 22 நாட்களிலும் 69 கொவிட்-19 மரணங்களும் பதிவாகியுள்ளன.

இதையடுத்து யாழ். மாவட்டத்தில் ஒகஸ்ட்-22 வரையில் கோவிட்-19 காரணமாக உயிரிழந்துள்ளவர்களது எண்ணிக்கை 200 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் இது வரை ஏற்பட்ட கோவிட்-19 மரணங்கள் தொடர்பான விவரம்:-

**மொத்த உயிரிழப்பு பிரதேச செயலர் பிரிவு வாரியாக**

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் - 43 பேர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் - 29 பேர், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் - 23 பேர், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் - 21 பேர், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் - 19 பேர், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் - 15 பேர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் - 14 பேர், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் - 11 பேர், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் - 10 பேர், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் - 06 பேர், வேலணை பிரதேச செயலர் பிரிவில் - 05 பேர், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் - 02 பேர், ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் - 02 பேர்.

# வைத்தியசாலை சிற்றூழியர் உட்பட 10 பேர் மட்டக்களப்பில் கொரோனாவால் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஒக. 24

மட்டக்களப்பில் நேற்றுக் காலை 24 மணித்தியாலங்களில் மருத்துவமனை சிற்றூழியர் உட்பட 10 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தனர்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

இதற்கமைய, மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் இது வரை கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 182 ஆக அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# அமைச்சர்களின் ஒகஸ்ட் சம்பளத்தை கோவிட் நிதியத்துக்கு வழங்க முடிவு

கொழும்பு, ஒக. 24

அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவரினதும் ஒகஸ்ட் மாத சம்பளத்தை கோவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்குவதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையில் அனுமதி கிடைத்துள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

> “இந்திய - இலங்கை உறவு அதல பாதாளத்தில் இருக்கும் நிலையில், மிலிந்த மொறகொட தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு தேர்ந்த அரசியல்வாதி, இந்தியாவைப் பற்றி அதிக புரிதல் கொண்டவர். பாரதப் பிரதமர் மோடிக்கு நெருக்கமானவராகப் பார்க்கப் படுகின்றார்”



# இலங்கை குறித்த இந்தியாவின் கொள்கையில் மாற்றம் வரும்!

## ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி மேஜர் மதன் குமார் சொல்கின்றார்

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வருகையை இந்தியா எதிர்பார்த்துள்ளது. அதேவேளையில் இலங்கை குறித்த இந்தியாவின் வெளியுறுவுக் கொள்கையில் மாற்றம் ஒன்று ஏற்படும்” எனக் கூறுகின்றார் ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரியும், அரசியல், பாதுகாப்புத்துறை விவகார ஆய்வாளருமான மேஜர் மதன் குமார்

நேர்காணல் ஒன்றில் அவர் தெரிவித்துள்ள முக்கிய கருத்துக்கள் வருமாறு:

**கேள்வி:** இந்தியாவிற்கான தூதுவராக முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட நியமிக்கப்பட்டிருக்கின்றார். இந்த நியமனத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?

**பதில்:** மிலிந்த மொறகொடவிற்கு ஒரு வரலாறு உண்டு. இந்தியப் பிரதமர் மோடிக்கு அவர் நெருக்கமானவர். மோடியின் அபிவிருத்தி திட்டங்கள், அவரின் செயல்பாடுகள் பற்றி மிகவும் பெருமையாகப் பேசினார். இந்தியா இலங்கைக்கு இடையிலான வர்த்தகத்துறை, சுற்றுலாத்துறை, கலாசாரம் இவை பற்றி பேசியுள்ளார்.

இந்திய - இலங்கை உறவு அதவ பாதாளத்தில் இருக்கும் இந்நிலையில், மிலிந்த மொறகொட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஒரு தேர்ந்த அரசியல்வாதி, வர்த்தகரும்கூட. இந்தியாவைப் பற்றி அதிக புரிதல் கொண்டவர். பாரதப் பிரதமர் மோடிக்கு நெருக்கமானவராகப் பார்க்கப்படுகின்றார்.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்த ஒருவரை தூதுவராக நியமித்து, அவருக்கு அமைச்சரவை அதிகாரத்தையும் சேர்த்துக் கொடுத்திருக்கின்றார்கள். இதற்கு அர்த்தம் என்னவென்றால், இலங்கை ஜனாதிபதிக்கு நேரடியாகவே தகவல்களை வழங்கக்கூடியதாக இருக்கும்.

இந்த சமயத்தில் இலங்கை அரசாங்கம் இதை ஏன் செய்திருக்கின்றது என்றால், சீன ஆதரவு நிலைப்பாடு ஒன்றை எடுத்து அதில் நெடுந்தூரம் பயணம் செய்து விட்டார்கள். அதற்கு இந்தியாவின் எதிர்ப்பு மிக அதிகமாக இருக்கின்றது. குறிப்பாக துறைமுக நகரத் திட்டம். இதனால் இந்தியாவின் இறையாண்மைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள். இலங்கைத் தமிழர்களுக்கு உண்டான வாழ்வுரிமைப் பிரச்னை.

சீனாவின் வழியில் சென்ற இலங்கை, இந்தியாவுடன் மோசமடைந்திருக்கும் உறவுகளைச் சரி செய்வதற்காகவும், இலங்கை இந்திய உறவை வலுப்படுத்துவதற்காகவும், இந்தியாவை சாந்தப்படுத்துவதற்காகவும், மிலிந்த மொறகொடவை நியமித்திருப்பதாக நான் பார்க்கிறேன்.

**கேள்வி:** இந்தியாவுடனான உறவுகளை வலுப்படுத் துவதற்கான திட்ட யோசனை ஒன்றுடன் தான் மிலிந்த வரவிருக்கின்றார். இந்தத் திட்டம் இந்தியாவினால் எந்தளவிற்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக, வரவேற்கப்படக்கூடியதாக இருக்கும் என நினைக்கின்றீர்கள்?

**பதில்:** தூதரக அதிகாரியாக நியமிக்கப்பட்ட அறிவிப்பு வந்தவுடன் இந்தியா பெரியளவிற்கு அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் இதற்கான எதிர்ப்பு எதுவும் இந்தியா தெரிவிக்கவில்லை. இதனை பாரதப் பிரதமர் மோடி ஒருவகையில் வரவேற்பார் என்று நம்புகின்றேன். ஏனெனில், மோடிக்கும் மிலிந்த மொறகொடவிற்கும் ஏற்கனவே 15 வருடகாலத் தொடர்பு இருக்கின்றது. அவர் குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது அந்தத் தொடர்பு ஏற்பட்டது. அதனால் இதை முன்னெடுத்துச் செல்வார் என்று தான் நினைக்கின்றேன்.

மிலிந்த மொறகொட இந்திய ஊடகங்களுக்குக் கொடுத்த பேட்டியில், இந்தியா இலங்கையுடனான உறவு சமச்சீரற்றதாக உள்ளது எனக் கூறியிருந்தார். இதனை சரி செய்ய வேண்டும் என்பது அவரது கருத்து.

இரண்டாவது, இந்தியாவின் மிக முக்கியமான கோரிக்கையான மாகாண சபை தேர்தல், மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பில் தனது சொந்தக் கருத்தாக அவர் ஒன்றைத் தெரிவிக்கின்றார். மாகாண சபைக்கு உடன்படாத ஒரு கருத்தையே அவர் கொண்டுள்ளார். மாகாண சபைக்குப் பதிலாக அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ளதைப் போன்ற செனட் அமைப்பைக் கொண்டு வந்து, ஓரளவுக்கான சுயாட்சியை தரவேண்டும் என்ற ஒரு பார்வை அவருக்கு இருக்கின்றது.

**கேள்வி:** இந்த நிலையில் அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் இந்தியாவின் அழுத்தம் தொடர்ந்தும் இருக்குமா?

**பதில்:** இந்தியாவில் ராஜீவ் காந்தியின் காலத்திலிருந்து அரசாங்கங்கள் மாறியிருந்தாலும், மாகாண சபைகள் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. 3 முக்கிய விடயங்கள் குறித்து இந்தியா சொல்லிக் கொண்டுவருகின்றது. ஒன்று - ஈழத் தமிழர்களுக்கான பாதுகாப்பு, அவர்களுடைய சுயகௌரவம், அதிகாரம், அவர்களுடைய மறவாழ்வு என்பனவற்றை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றது.

**கேள்வி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் குழு ஒன்றும் புதுடில்லிக்கு வரவிருப்பதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கின்றது. இதைப் பற்றிய உங்களின் கருத்து என்ன?

**பதில்:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் டில்லி வருகையை இந்தியா எதிர்பார்த்திருக்கின்றது. இது கடந்த வருடம் நடந்திருக்க வேண்டியது. கொரோனா காரணமாக நடக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கை சென்றிருந்தபோது சந்தித்தார். அதன் அடுத்த கட்ட நடவடிக்கையாக இது நடக்கிறது. இவர்கள் இங்கு வரும் போது, நிச்சயமாக இந்தியப் பிரதமரையும், உள்துறை அமைச்சரையும், வெளிவிவகார அமைச்சரையும் சந்திப்பார்கள் என்று நான் நம்புகின்றேன்.

இந்தச் சந்திப்பின் போது இந்தியாவின் பார்வை என்னவென்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பல கட்சிகள் ஒன்றாக இணைந்தாலும், இதற்கு மிக வலிமையான ஓர் அரசியல் தலைமை தேவைப்படுகின்றது. இந்த அரசியல் தலைமை இல்லாதபோது 13ஆவது திருத்தச் சட்டம் போன்றவற்றில் அரசியல் தீர்வு காண வேண்டும் என்றால், இந்தியா யாரை ஆதரிக்கும் என்ற ஒரு கேள்வி இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பது ஒரு கூட்டமைப்பு. அதற்குள் ஒரு மிக முக்கியமான தலைவர் உருவாக வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. ஒன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவராக இருக்கலாம். அல்லது வெளியில் இருந்து வரலாம். அந்த மாதிரி ஒரு தலைவர் இருந்தால் தான், இந்தியா அவர்களுடன் கூட நின்று ஓர் அரசியல் தீர்வைக் காண முடியும் என்று இந்தியா எதிர்பார்க்கின்றது.

**கேள்வி:** இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது. குறிப்பாக கொழும்பு துறைமுக நகரம் போன்ற திட்டங்கள் இந்தியாவின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும் வகையில் அமைந்திருக்கின்றது. இவை குறித்து இந்தியாவின் அணுகுமுறை என்ன?

**பதில்:** துறைமுக நகரத் திட்டத்தை பாராளுமன்றில் கொண்டு வரும் போது இந்தியா அதற்கு ஒரு எதிர்ப்புத் தெரிவிக்கும் என்று அனைவரும் நினைத்தனர். ஆனால் இந்தியா மௌனம் சாதிக்கிறது. இன்றுவரை இந்தியா மௌனம் சாதித்துக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் உள்ளன.

இதுவரை இந்தியா இலங்கை உறவில் ஒரு மிக முக்கியமான மைல்கல் என்னவென்றால், இந்திய அமைதிப்படை அங்கு வந்தது. பின்னர் இந்தியா அதை பின்வாங்கிக் கொண்டது. அன்று ஆட்சியில் இருந்த இலங்கை அரசாங்க மும், விடுதலைப் புலிகளதும் தலைவரதும் ஒருமித்த கருத்தால் அது பின்வாங்கப் பட்டது. அதற்குப் பின்னர் ராஜீவ் காந்தியின் மரணம் நிகழ்ந்தது. அதற்குப் பின்னர விடுதலைப் புலிகளுடனான இந்திய அரசின் உறவு முடிவுக்கு வந்துவிட்டது. இலங்கை அரசாங்கத்துடனான உறவும் ஒரு தேக்க நிலையை அடைந்து.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் 2014 இல் ஆட்சி அமைத்த பின்னர் மோடி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார். அதன் பின்னர் இந்த உறவு முறை ஒருவகையான வேகம் எற்பட்டது.

இப்படி ஒரு சூழ்நிலையில் இந்த துறைமுக நகரத் திட்டம் போன்றன இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை அதிகரித்துள்ளது. குறிப்பாக கொரோனா வந்த பிறகு சீனாவின் செல்வாக்கு மேலும் தீவிரமடைந்திருக்கின்றது.

இந்த நிலையில் இதுவரை இலங்கை குறித்த வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்கக்கூடிய தருணத்திற்கு இந்தியா வந்து விட்டது. இனிவரும் காலங்களில் இலங்கையை எப்படிக் கையாள்வது என்பதில் மாற்றம் வரலாம். இதற்கும் காலம் தாழ்ந்து விட்டது. இந்த வேலைகள் நடந்து கொண்டிருக்கும் போது, இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை மிக மோசமான தாக்கத்தை உண்டாக்கியது.

வரும் ஜனவரியில் மிகப் பெரிய மாநிலமான உத்தரப்பிரதேச தேர்தல் வருகின்றது. இந்தத் தேர்தலுக்குப் பிறகு, இது ஒரு அதிகாரபூர்வ அறிவிப்பாகவும், இது தொடர்பான அதிகாரபூர்வ நடவடிக்கைகளும் தொடங்கும் என நினைக்கிறேன். தேர்தல் வெற்றி இந்திய ஜனநாயக அரசுக்கு ஒரு மிகப்பெரிய வலிமையைக் கொடுக்கும். இதை இவர்கள் தற்போது முக்கிய குறிக்கோளாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தல் ஒருபுறம் நடந்தாலும், இதற்குப் பின்புறம் நடக்கும் வேலைகள், பல விடயங்கள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன. குறிப்பாக ஜெய்சங்கர் இரண்டு, மூன்று தடவை அமெரிக்கா சென்று வந்திருக்கின்றார். அதன் பின்னர் இலங்கை அரசில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கண்கூடாகக் காண்கின்றோம். ■



# பொருளாதார மந்தநிலையால் மோடி ஆதரவு சரிந்துவிட்டதா?

## கணிப்புகள் கூறுவது என்ன?

**‘இந்தியா ருடே’ பத்திரிகை அண்மையில் 14 ஆயிரம் பேரிடம் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது. இதில் பதிலளித்தவர்களில் 24% பேர் மட்டுமே இந்தியாவின் அடுத்த பிரதமராக “மிகவும் பொருத்தமானவர்” நரேந்திர மோடி என்று கருதுகின்றனர்.**

**சௌதிக் பிஸ்வாஸ்**

இந்திய வாக்காளர்கள் மத்தியில் மிக நீண்ட தேனிலவைக் கொண்டாடியவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. பெரும் நிதி, வலுவாக இயங்கும் பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவோடு மோடி இரண்டு தேர்தல்களில் வெற்றி பெற்றார். அவரால் ஒரு தீவிர மான இந்து தேசிய வாத தளத்தை உரு வாக்க முடிந்தது. வாக்காளர்களை கவர்ந்திழுக்கவும் எதிரிகளை வீழ்த்தவும் தனது வசீகரத்தைப் பயன்படுததிக் கொண்டார்.

அதிர்ஷ்டமும் அவர் பக்கம் இருந்தது. 2016-ஆம் ஆண்டில் அவர் மேற்கொண்ட பண மதிப்பிழப்பு நடவடிக்கை மிகப் பெரும் தவறாக அமைந்தது. ஆனாலும் அவரை ஆதரிப்பவர்கள் அதை மன்னித்து விட்டார்கள். மந்தமான பொருளா தாரமும், குறிப்பாக கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகான வீழ்ச்சியும் மோடியின் செல்வாக்கைச் சரித்துவிட்டதாகத் தெரியவில்லை. வலுவான எதிர்க்கட்சி இல்லாததும் அவருக்குச் சாதகமாக இருக்கிறது.

ஆயினும், நரேந்திர மோடியின் கேள்விகளுக்கு அப்பாற்பட்ட புகழ் குறையத் தொடங்குகிறதா?

‘இந்தியா ருடே’ பத்திரிகையின் அண்மையில் 14 ஆயிரம் பேரிடம் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்தியது. இதில் பதிலளித்தவர்களில் 24% பேர் மட்டுமே இந்தியாவின் அடுத்த பிரதமராக ”மிகவும் பொருத்தமானவர்” நரேந்திர மோடி என்று கருதுகின்றனர். அடுத்த பொதுத் தேர்தல் 2024 இல் நடைபெற உள்ளது.

கடந்த ஆண்டு இதேபோன்ற கருத்துக் கணிப்பில் இருந்து இது 42 சதவிகிதம் இருந்திருக்கிறது. இப்போது அவரது செல்வாக்கு செங்குத்தாகச் சரிந்திருக்கிறது. “எனது 20 ஆண்டுகளுக்கும் மேலான கருத்துக் கணிப்பு அனுபவத்தில் எந்தப் பிரதமரின் புகழிலும் இதுபோன்ற வீழ்ச்சி நிகழ்ந்ததை என்னால் நினைவுகூர முடியவில்லை” - என்று அரசியல்வாதி யும், மோடியின் விமர்சகருமான யோகேந்திர யாதவ் குறிப்பிட்டார்.

நரேந்திர மோடிக்கு இது ஒரு கடினமான ஆண்டு. இரண்டாவது கொரோனா அலையை அவரின் அரசு தவறாகக் கையாண்ட நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்துவிட்டனர். பொருளாதாரம் தள்ளாடி வருகிறது: பணவீக்கம் அதிகரித்து விட்டது. பெற்றோல், டீசல், எரிவாயு உள்ளிட்ட எரிபொருள்களின் விலை உயர்ந்துள்ளது. வேலைவாய்ப்பு குறைந்துவிட்டது. நுகர்வு விகிதமும் சரிந்திருக்கிறது.

சில துயரங்களும் அவநம்பிக்கையும் இந்தியா டுடே இதழின் கருத்துக் கணிப்பில் பிரதிபலிக்கின்றன. இதில் பங்கேற்றவர்களில் சுமார் 70% பேர் தொற்றுநோய்களின் போது தங்கள் வருமானம் குறைந்துவிட்டதாகக் கூறியிருக்கின்றனர். அதே அளவினர் கொரோனா காலத்தில் உண்மையான இறப்பு எண்ணிக்கை அதிகாரபூர்வமான 4லட்சத்து 30ஆயிரத்தை விட அதிகமாக இருப்பதாக நம்புகின்றனர்.

ஆனால் மோடி அரசு கொரோனாவை கையாண்ட விதம் “நன்றாக” இருந்தது என்று கருத்துக் கணிப்பில் பங்கேற்ற 36% பேர் பதிலளித் துள்ளனர். மக்களுக்கு ஏற்பட்ட துயரத் துக்கு மோடியின் அரசு மட்டுமே காரணம் என்று கூறியிருப்பவர்கள் 13% பேர் மட்டுமே. 44% பேர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கொரோனா நடவடிக்கைகள் குழப்பமாக இருந்த தாகக் கூறியுள்ளனர்.

தொற்றுநோய் பெருமளவில் பாதிக்கவில்லை என்றால் மோடியின் செல்வாக்கு ஏன் குறைந்திருக்கிறது என்பதற்கான குறிப்புகளையும் இந்தக் கருத்துக் கணிப்பு தருகிறது. பணவீக் கமும் வேலைவாய்ப்பு இல்லாததும் இரண்டு கவலைக்குரிய அம்சங்களாக உருவெடுத்திருக்கின்றன. இந்தக் கருத் துக் கணிப்பில் பதலளித்தவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் விலைகளைக் கட்டுப்படுத்தத் தவறியது மோடி அரசின் மிகப்பெரிய தோல்வி என்று கூறியுள்ளனர்.

“மோடியின் புகழ் வீழ்ச்சியடைவதில் ஆச்சரியமில்லை” என்று டில்லியைச் சேர்ந்த கொள்கைசார் ஆராய்ச்சி மையத்தின் ராகுல் வர்மா கூறுகிறார்.

நரேந்திர மோடி மக்களைப் பிளவுபடுத்தும் தலைவராக இருக்கிறார். அவரின் ஆட்சியில் ஊடக சுதந்திரம் கணிசமாகக் குறைந்துவிட்டதாக விமர்சகர்கள் கூறுகின்றனர்.

அவர் 2014-ஆம் ஆண்டு பிரதமராகப் பதவிக்கு வந்த பிறகு இதுவரை செய்தியாளர் சந்திப்பை நடத்தவில்லை. அவருக்கு எதிரான குரல்கள் அதிகரித்து வருகின்றன. நரேந்திர மோடியும் அவ ரது கட்சியும் மதப் பதற்றத்தை தூண் டும் வகையிலான அரசியலைப் பயன் படுத்துவதாக குற்றம்சாட்டப்படுகிறது.

சர்ச்சைக்குரிய குடியுரிமைச் சட்டம் மற்றும் வேளாண் சட்டங்களும் கடுமை யான எதிர்ப்பைச் சந்தித்தன. இவை வெல்ல முடியாதவர் என்ற நரேந்திர மோதியின் பிம்பத்தை உடைத்திருப்ப தாகத் தெரிகிறது. கடந்த மே மாதம் மேற்கு வங்கத்தில் அவரின் கட்சி தோல் வியடைந்தது. இது அவரின் எதிரிக ளுக்கு உற்சாகத்தை அளித்திருக்கிறது.

விளம்பர பலகைகள், தடுப்பூசி சான்றிதழ்கள், செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் என காணும் இடங்களில் எல்லாம் முகம் காட்டும் ஒரு தலைவருக்கு கருத்துக் கணிப்புகளில் செங்குத்தான சரிவு தனிநபர் வழிபாட்டு வீழ்ச்சியின் தொடக்கமே என பலரும் நம்புகிறார் கள். ஆனால், இதுபோன்று குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்கள் பங்கேற் கும் கருத்துக் கணிப்புகள் உண்மையான வாக்காளர்களைக் கொண்ட தேசத்தின் மனநிலையைப் பிரிதிபலிக்கின்றனவா?

13 நாடுகளின் தலைவர் களின் தேசிய மதிப்பீடுகளை ஆய்வு செய் யும் ‘மார்னிங் கன்சல்ட்’டின் புள்ளி விவரங்களின்படி, நரேந்திர மோடிக்கான ஆதரவு கடந்த ஆண்டு மே மாதத்தில் இருந்து 25 புள்ளிகள் சரிந்திருக்கிறது. ஆயினும், ஆகஸ்ட் மாத மத்தியில் 47% ஆதரவைப் பெற்று அவர் மற்றவர்களை விட முன்னணியில் இருக்கிறார்.

கடந்த ஜூன் மாதத்தில் மற்றொரு கருத்துக் கணிப்பு அமைப்பான பிரஷ்ணத்தின் கணக்கெடுப்பில், 2024-ஆம் ஆண்டு தேர்தலில் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக 33% சதவிகிதம் பேர் மோடிக்கு ஆதரவளித்துள்ள னர்.

டில்லியை தலைமையிட மாகக் கொண்ட சி-வோட்டர் நிறுவனம் ஒவ்வொரு வாரமும் இந்தியா முழுவதும் 543 பாராளு மன்றத் தொகுதிகளில் 10,000 பேரிடம் கருத்துக் கணிப்புகளை நடத்துகி றது. இந்த நிறுவனத்தின் கருத்துக் கணிப்புகளின் படி கடந் மே மாதத்தில் மோதியின் செல்வாக்கு 37% ஆகக் இருந்திருக்கி றது. இது ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் இருந்து 20 புள்ளிகள் குறைவு. அது அவரது கட்சி மேற்கு வங்கத் தேர்தலில் தோல்வியடைந்த நேரம். அப்போதுதான் நாடு முழுவதும் இரண்டாவது அலை வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது.

அதன் பிறகு மோதியின் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்து இப்போது 44%ஆக உள்ளதாக சி-வோட்டரின் யஷ்வந்த் தேஷ்முக் கூறுகிறார். “அவ ருக்கு மோசமான காலம் முடிந்து விட்டது என்று நான் நம்புகிறேன். விசுவாசமான வாக்காளர் கட்டமைப் பின் காரணமாக அவரது மதிப்பீடுகள் 37% க்குக் கீழே இதுவரை குறைய வில்லை.”

குறிப்பிட்ட இடைவெளியைக் கொண்ட தொடர்ச்சியான கருத்துக் கணிப்புகள் தலைவர்களின் செல்வாக் கையும் மக்களின் மனநிலையையும் துல்லியமாகப் படம்பிடிப்பதற்கு உதவு வதாக தேஷ்முக் நம்புகிறார். சி-வோட் டரின் கணிப்பின்படி இந்தியாவின் டாப் 10 முதலமைச்சர்களில் 9 பேர் பாரதிய ஜனதா கட்சியைச் சாராதவர்கள் என்பது இன்னும் சுவாரஸ்யமான அம்சம். மோடி தனிப்பட்ட முறையின் தனது செல்வாக்கை தக்கவைத்துக் கொண் டிருக்கிறார். “பலர் இன்னும் அவரை நம்புகிறார்கள். அவரது நோக்கம் நல்லது என்று நினைக்கிறார்கள்” என்கிறார் தேஷ்முக்.

கருத்துக் கணிப்புகளில் ஏற்பட்டி ருக்கும் சரிவு மோடியை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்குப் போதுமான தாக இருக்காது. மிகவும் குறைந்த நிலையில்கூட ராகுல்காந்தியை விட இரண்டு மடங்கு செல்வாக்கு மோடிக்கு இருந்திருக்கிறது.

ஆகவே, நம்பகமான எதிர்க்கட்சிகள் இல்லாததால் மோடிக்கு கூடுதலான ஆதரவு கிடைக்கலாம். “மோடிதான் இன்னும் பந்தயத்தில் முந்திச் செல்கிறார். ஆனால், கருத்துக் கணிப்பு களில் ஏற்பட்டிருக்கும் சரிவு அவரை கொஞ்சம் கவலைப்பட வைக்கும்” என்கிறார் வர்மா.

**- பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் : 1 மணித்தியாலம்

04. **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

அதிகம்/ எங்களை/ சீனமக்கள்/உலகிலேயே/ பயன்படுத்துவோர் / ஆவர்.

..............................................................................................................

05. **பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்துக்களைத் தருக.**

i) கங்கணங்கட்டுதல் : ..............................................................

ii) ஆறப்போடுதல் : ..............................................................

06. **பின்வரும் பாடல்வரியைப் பூர்த்தி செய்க.**

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் தொல் உலகில்
..............................................................
எல்லார்க்கும் பெய்யும் மழை.

07. **பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.**

i) ஒவ்வொரு பூவும் அழகானது. ( )

ii) மனிதன் என்பது படர்க்கை ஒருமையாகும். ( )

iii) சிங்கம் கர்ஜிக்கும் என்பது போல கரடி உறுமும். ( )

08. **பின்வரும் தொடர் மொழிக்கான ஒரு மொழியை எழுதுக.**

i) ஒன்றைப் போலிருக்கும் மற்றொன்று : ..............................................................

ii) பத்தாண்டுகளைக் குறிக்கும் சொல் : ..............................................................

09. **பின்வரும் விடுகதைகளுக்கான விடைகளைத் தருக.**

i) கத்தியின்றி இலைகளை வெட்டும். அது என்ன?

..............................................................

ii) மெல்லியதாய் இருக்கும், தண்ணீரில் மிதக்கும் ஆயிரம் பேர் சேர்ந்தாலும் அதனைத் தூக்க முடியாது, அது என்ன?


..............................................................

10. **பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கத்தை எழுதுக.**

i) இ.பெ.கூ: ..............................................................

ii) இ.மி.ச. : ..............................................................

11. **பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

i)  ............................

ii)  ............................

12. **பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கான தமிழ்க்கருத்தை எழுதுக.**

i) National dress : ..............................................................

ii) Fisherman : ..............................................................

13. **கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.**

i) you / ready? / Are : ..............................................................


ii) the / canteen / to / am / I / going : ..............................................................

14. **'சிக்குராதா' என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

..............................................................

15. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.**

i) உங்களுக்கு மாம்பழம் வேண்டுமா? : ..............................................................


16. 


வட்டத்தில் காணப்படும் எண்கள் அனைத்தையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணிற்கும் மிகச் சிறிய எண்ணிற்கும் இடையிலான வித்தியாசத்தை எண் பெயரில் தருக.

..............................................................

17. 28 - 13 ஐக் கழிக்கும்போது கிடைக்கும் விடையினை உரோம எண்ணில் எழுதுக.


..............................................................

18. 

இத்திண்ம உருவில் காணப்படும்,

i) விளிம்புகள் எத்தனை? ..............................................................

ii) தள வடிவங்கள் எவை? ..............................................................

19. 

i) நிழற்றப்பட்ட பகுதியினைத் தசம எண்ணில் தருக.

..............................................................

ii) நிழற்றப்படாத பகுதியினைப் பின்னத்தில் தருக.

..............................................................

# 900 சோதனை சாவடிகள்; 40,000 பொலிஸார் களத்தில்

## தொடரும் தீவிர கண்காணிப்பு



கொழும்பு, ஒக. 24

**தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளைக் கண்காணிப்பதற்கு சுமார் 40 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் எத்தனை பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும், அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கை எவ்வளவு எனவும் இணையவழி ஊடாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச பொலிஸ் பொறிமுறையுடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டகாலத்திலும் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர். ஏனைய பணிகளுக்கு மத்தியில் தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தொடர்பான பணியிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். சுமார் 40 ஆயிரம் பொலிஸார் வரை இந்தக் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு தழுவிய ரீதியில் 900 வாகனப் பரிசோதனை சாவடிகள் உள்ளன. நாளாந்தம் சோதனை நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. தேவைக்கேற்ப இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்" - என்றார். (இ)

## நாட்டில் பரவலாக மழை

கொழும்பு, ஒக. 24

நாட்டில் மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும், கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், வடக்கு மாகாணத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும் எனவும், மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (இ)

## மேலும் 10 இலட்சம் தடுப்பூசிகள் சீனாவிலிருந்து இலங்கைக்கு

கொழும்பு, ஒக. 24

மேலும், 10 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று நாட்டை வந்தடையவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், மேலும் 20 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இம்மாத இறுதிக்குள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது


கொழும்பு, ஒக. 24

நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் இணைந்து சேவையாற்றி வரும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர், 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் தனுதம் புவெள பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று நொச்சியாகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

41 வயது பொலிஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் நொச்சியாகம பொலிஸ் நிலையத்தில் இணைந்து சேவையாற்றி வருகின்ற நிலையில் அண்மையில் ஒயாமடுவ பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டிருந்தார்.

போதைப்பொருள், கஞ்சாவுக்கு அடிமையான குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள், தனுதம்



புவெள பிரதேசத்தில் போதைப் பொருள் வியாபாரியுடன் நின்று கொண்டிருந்தபோதே நொச்சியாகம பொலிஸார் சந்தேகத்தின் பேரில் குறித்த பொலிஸ் கான்ஸ்டபிளைக் கைதுசெய்துள்ளனர்.

அவரை சோதனைக்கு உட்படுத்தியபோது அவரிடமிருந்து 200 கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 502 பேர் கைது!

கொழும்பு, ஒக. 24

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 502 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 56 ஆயிரத்து 796 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல்மாகாண எல்லைப் பகுதிகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 13 சோதனைச் சாவடிகளில் 757 வாகனங்களும், 1,509 நபர்களும் நேற்றுமுன்தினம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது. (இ)

## மதுபானசாலைகளில் குவியும் நபர்களை அரச நிவாரணத்திட்டத்தில் உள்வாங்காதீர்

### அரசிடம் செந்தில் தொண்டமான் வேண்டுகோள்

பதுளை, ஒக. 24

"கொரோனாத் தொற்று நெருக்கடியையும் அதன் பாரதூரத்தையும் கருத்தில்கொள்ளாது மதுபானசாலைகளில் குவிந்து மதுபானங்களைக் கொள்வனவு செய்பவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை மதுபானசாலைகளில் பதிவுசெய்யும் புதிய முறைமையை அறிமுகப்படுத்தி, எதிர்காலத்தில் அரசால் வழங்கப்படும் நிவாரணத்திட்டத்தில் இவர்களை உள்வாங்காமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் பெருந்தோட்டப்பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளருமான செந்தில் தொண்டமான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

"நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சுகாதாரத்துறையினர் மற்றும் பல்வேறு தரப்பினரின் கோரிக்கையின் பிரகாரம் முழு நாட்டையும் முடக்கி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தைக் கடந்த 20ஆம் திகதி இரவு முதல் அமுல்படுத்த இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்த குறித்த தினத்தில் மதுபானசாலைகளில் அதிகளவானவர்கள் குவிந்ததுடன், நீண்ட வரிசையில் காத்திருந்து மதுபானங்களையும் கொள்வனவு செய்து சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

சமூக உணர்வானது ஒருசிலர் மத்தியில் மாத்திரம் ஏற்பட்டு பயனில்லை. இலங்கையில் வாழும் அனைவர் மத்தியிலும் சமூக உணர்வு ஏற்பட்டால் மாத்திரமே கொரோனாத் தொற்றை முழுமையாக நாட்டிலிருந்து ஒழிக்க முடியும்.

கொரோனாத் தொற்றால் பல குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுப் பொருட்களைக் கூட கொள்வனவு செய்ய முடியாது திண்டாடிவரும் சூழலில் இவ்வாறான நபர்களைக் காணும்போது பெரும் வேதனை ஏற்படுகின்றது.

எதிர்காலத்தில் மதுபானசாலைகளில் மதுபானங்களைக் கொள்வனவு செய்பவர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் பதிவு செய்ய புதிய முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும். இவ்வாறு பதிவுசெய்யப்படும் அடையாள அட்டை இலக்கத்தை உடைய நபர்களை அரசால் வழங்கப்படும் நிவாரணத் திட்டத்தில் உள்வாங்கக்கூடாது.

மதுபானம் வாங்க நிதி இருக்கும் இவர்களுக்கு உணவுப்பொருட்களையும் வாங்க முடியும். எனவே, அவர்களுக்கு வழங்கும் நிதியை வாழ்வாதாரத்தை இழந்து, வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு மேலதிகமாக வழங்க வேண்டும். இதன் மூலம் உண்மையாக வறுமையிலும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் வாழும் மக்களுக்கு உதவிகளைச் செய்ய முடியும்" - என்றுள்ளது. (இ)

## மலையக பெருந்தோட்டங்களை ஆக்கிரமிக்கும் முயற்சியில் சீனா?

### தமிழ் தேசிய கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 24

மலையகப் பெருந்தோட்டங்களை சீன நிறுவனங்கள் ஆக்கிரமிப்புச் செய்யக் கூடிய சூழ்ச்சிகள் நடக்கின்றன என அறியக்கிடைத்துள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சம்பளப் பிரச்சனையை ஒரு சட்டப் பிரச்னையாக மட்டும் பார்க்காமல் அதனை இன்னும் விரிவாக அணுக வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இணையவழி ஊடாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் எம். ஏ. சுமந்திரன் எம். பியிடம் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிணக்கு குறித்த அவரது சட்ட ஆலோசனை என்ன என்பது குறித்து கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கூட்டு ஒப்பந்தம் நிராகரிக்கப்படுகின்ற விடயங்களின்போது சட்ட உதவிகளைச் செய்திருக்கின்றேன். தற்போது ஆயிரம் ரூபா விவகாரத்தை எடுத்துக்கொண்டால், ஆயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து இன்னமும் பிரச்னை இருக்கின்றது. தற்போதுள்ள நிறுவனங்களை நட்டமடையச்செய்து, நிறுவனங்களைக் கொண்டு நடத்த முடியாத சூழ்நிலைக்குத் தள்ளிவிட்டு, வெளிநாட்டு நிறுவனங்களைக் குறிப்பாக சீன நாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் சூழ்ச்சி நடப்பதாகவும் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால், இதில் எந்தளவு உண்மை இருக்கின்றது என்பது தெரியவில்லை. ஆகவே, சம்பளப் பிரச்னையை ஒரு சட்டப் பிரச்னையாகப் பார்க்காமல் சற்று விரிவாக அணுகவேண்டும்" - என்றார். (இ)

# உலகின் 100 கோடி சிறுவர்களுக்கு பருநிலை மாற்றத்தால் பேராபத்து!

## ஐ.நா. சிறுவர் நிதியம் எச்சரிக்கை

ஜெனிவா, ஓக. 24

பருவநிலை மாறுதல் உலகெங்கும் சுமார் 100 கோடி சிறுவர்களின் சுகாதாரம், கல்வி, பாதுகாப்பு ஆகியவற்றைப் பறித்துவிடப்போகிறது என்று ஐ. நா. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெவ்) எச்சரித்துள்ளது.

காலநிலை நெருக்கடியை ஒரு சிறுவர் உரிமைப் பிரச்னை என்று தொடர்புபடுத்தியிருக்கும் யுனிசெவ், அதன் விளைவுகள் உலக நாடுகளில் சிறுவர்களை எந்தளவுக்குப் பாதிக்கும் என்ற அளவுச் சுட்டியை வெளியிட்டிருக்கிறது.

பருவநிலையும் சூழல் பாதிப்புகளும் ஏற்படுத்துகின்ற அதிர்ச்சிகள் நேரடியாக சிறுவர்களின் வாழ்வுக்கான உரிமைகளையே பாதிக்கின்றன. வெப்பம், புயல், மழை, மாசு என எல்லா வடிவங்களிலும் தோன்றும் சீற்றங்கள் சிறுவர்களுக்கான அத்தியாவசிய தேவைகளைத் தடுக்கின்றன.

அதி உச்ச அளவில் சிறுவர்கள் பாதிக்கப்படவுள்ள நாடுகளின் தரவரிசையில் முதல் இடங்களில் ஆபிரிக்க நாடுகளான மத்திய ஆபிரிக்கக் குடியரசு, சாட், நைஜீரியா ஆகியன உள்ளன. அவற்றுக்குப் பின்னால் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் ஆகிய தெற்காசிய நாடுகளும் அடங்கியுள்ளன. மிகவும் அதிகளவு காபன் வெளியேற்றுகின்ற நாடுகளில் ஒன்றான இந்தியாவில் சிறுவர்களது எதிர்காலம் மிக ஆபத்தான திசையில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

யுனிசெவ்வின் உலகளாவிய மதிப்பீட்டு ஆய்வுகளின்படி 24 கோடி சிறுவர்கள் கடற்கரையோர வெள்ளம் காரணமாகவும்,40 கோடி சிறுவர்கள் புயல்கள் காரணமாகவும், 82 கோடி சிறுவர்கள் வெப்ப அனல் வீச்சினாலும், 92 கோடி சிறுவர்கள் தண்ணீர் பற்றாக்குறை காரணமாகவும் பெரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# 'மெடிஜென்' தடுப்பூசி தாய்வான் தயாரித்தது

## முதல் ஊசியை ஜனாதிபதி பெற்றார்

தைபே, ஓக. 24

தாய்வானில் உருவாக்கப்பட்ட "மெடிஜென்" (Medigen) கோவிட் 19 தடுப்பூசி அவசரகால பயன்பாட்டுக்கு அந்த நாட்டு சுகாதார அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிலையில் முதல் நபராக தாய்வான் ஜனாதிபதி சாய் இங்-வென் அந்த தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து கோவிட் 19 தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதங்களை அடுத்து, தடுப்பூசியில் தன்னிறைவு என்ற நோக்கத்துடன் உள்நாட்டிலேயே மெடிஜென் தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மொடர்னா மற்றும் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளே தாய்வானில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் அந்தத் தடுப்பூசிகளை நிராகரித்து உள்நாட்டுத் தயாரிப்பான மெடிஜென் தடுப்பூசியை ஜனாதிபதி சாய் இங்-வென் பெற்றுக்கொண்டார்.

மத்திய தைபேயில் உள்ள மருத்துவமனையில் அவர் நேற்று தடுப்பூசி போட்டுக்கொண்டார். ஏனையோரையும் தடுப்பூசி போட்டுக்கொள்ள ஊக்குவிக்கும் வகையில் சாய் இங்-வென் தடுப்பூசி போட்டுக்கொண்ட நிகழ்வு நேரலையாக சமூக ஊடகங்களில் ஒளிபரப்பப்பட்டது.

இதேவேளை, மெடிஜென் தடுப்பூசிக்கு அவசரப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக தாய்வான் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த அங்கீகாரத்தை செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தாய்வானின் முக்கிய எதிர்க்கட்சியான கோமிண்டாங் தெரிவித்துள்ளது. (ஐ)

# 43 இலட்சம் சிறுவர்கள் தொற்றால் பாதிப்பு!

நியூயோர்க், ஓக. 24

உலகம் முழுவதும் கொரோனா தொற்றால் 43 இலட்சம் குழந்தைகள், சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறுவர்களுக்கு இதுவரை கொரோனா தடுப்பூசி எதுவும் வழங்கப்படவில்லை. ஆனால், அதற்காக அவர்களுக்கு தொற்று பரவாது என்பதல்ல. தொற்று பரவலின் அடிப்படையில் சிறுவர்கள் தொற்றுக்கு உள்ளாகின்றமை குறைவாக உள்ளது.

அமெரிக்காவில் தற்போது 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்கள் தொற்று நோயாளர்களாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஆயிரக்கணக்கானோர் கடுமையான - உயிருக்கு ஆபத்தான நிலையிலுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் இறந்தனர்.

இதேசமயம், ஆபத்தான மிகவும் வேகமாகப் பரவக்கூடிய டெல்டா திரிபு வைரஸ் உலகம் முழுவதும் வேகமாக பரவி வரும் நிலையில் சிறுவர்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, சிறுவர்களை பாதுகாப்பதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தடுப்பூசிகள் உயிரை காப்பாற்றுகின்றன. ஆனால், நம் சிறுவர்களால் அவற்றைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது கவலைக்குரியது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)



# அமெரிக்காவில் வெள்ளம்: உயிரிழப்பு 22ஆக உயர்வு!

## 50 பேரை காணவில்லை

அமெரிக்காவின் டென்னசி மாகாணத்தில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சிக்கி 22 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 50 பேர் காணாமல் போயுள்ளனர்.

வெள்ளத்தால் இடிந்து விழுந்த கட்டடங்களுக்குள் இருந்து நேற்றுமுன்தினம் சிலரின் சடலங்கள் மீட்கப்பட்டன என்று டென்னசி - ஹம்ப்ரிஸ் கவுண்டி பொது தகவல் அதிகாரி கிரே கோலியர் தெரிவித்தார்.

வெள்ளப்பெருக்கால் வீதிகள் மோசமாக சேதமடைந்துள்ளதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு கோபுரங்கள் சாய்ந்தமையால் தொடர்பாடல் சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் பற்றிய தகவல்களை பெற முடியாத நிலையில் பல குடும்பங்கள் நெருக்கடியைச் சந்தித்துள்ளன.

அவசரகால மீட்புப் பணியாளர்கள் வீடு வீடாக காணாமல் போனவர்களை தேடிக்கொண்டிருக்கிறார்கள் என ஹம்ப்ரிஸ் கவுண்டி சுகாதார - பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர் கிறிஸ்டி பிரவுண் கூறினார். (ஐ)

# வெளிநாட்டு படைகள் வெளியேறும் காலக்கெடுவை நீடிக்க மாட்டோம்!

## தலிபான்கள் எச்சரிக்கை

காபூல், ஓக. 24

வெளிநாட்டுப் படைகள் வெளியேறுவதற்கான காலக்கெடுவை ஓகஸ்ட் 31இன் பின்னர் நீடிக்க மாட்டோம் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.



ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய நிலையில் விமான நிலையத்தை நேட்டோ படைகள் தம் வசம் வைத்துள்ளனர். ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற விரும்பும் மக்கள் அங்கிருந்து விமானங்கள் மூலம் வெளியேறுகின்றனர். நேற்று வரை 28 ஆயிரம் பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேற ஆயிரக்கணக்கான ஆப்கான் மக்கள் துடிக்கின்றனர். இவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல நேட்டோ நாடுகள் சம்மதித்துள்ளன. இதற்காக வெளியேறும் நாளை நீடிப்பது தொடர்பில் ஆலோசித்து வருகின்றன.

இந்த நிலையில், தலிபான் செய்தி தொடர்பாளர் கருத்து வெளியிடுகையில், "அமெரிக்க படைகள் ஓகஸ்ட் 31ஆம் திகதி அங்கிருந்து வெளியேறும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உத்தரவாதம் அளித்திருந்தார். இதை நீடிப்பது ஆப்கானிஸ்தானின் ஆக்கிரமிப்பை விரிவுபடுத்துவதாகும். இது மாறினால் விளைவுகள் ஏற்படும்", என்றார். (ஐ)

# நியூசிலாந்தில் முடக்கம் நீடிப்பு!

வெலிங்டன், ஓக. 24



நியூசிலாந்தில் அண்மை நாட்களில் 100 வரையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து நாட்டில் அறிவிக்கப்பட்ட பொது முடக்கம் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்படும் என்று பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்ன் நேற்று அறிவித்தார்.

இதேநேரம் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட ஒக்லாந்தில் எதிர்வரும் 31ஆம் திகதி வரை முடக்கம் நீடிக்கும். டெல்டா திரிபு கொரோனா வைரஸால் உலகம் முழுவதும் எதிர்கொண்டு வரும் மோசமான நெருக்கடி நிலையை பாடமாகக் கொண்டு எச்சரிக்கையாக இதனைக் கையாள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நியூசிலாந்தில் நேற்று முன்தினம் 35 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். இதனால், கடந்த ஒருவாரத்துக்கு உள்ளாக அங்கு 107 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதேவேளை, தலைநகர் வெலிங்டனிலும் இரு தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# காபூல் விமான நிலையத்தில் மர்மநபர்கள் துப்பாக்கி சூடு!

## ஆப்கான் வீரர் ஒருவர் மரணம்

காபூல், ஓக. 24

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள விமான நிலைய வளாகத்தில் நேட்டோ படையினர், ஆப்கான் படைகள் மற்றும் ஆயுததாரிகள் இடையே நடந்த துப்பாக்கி சண்டையில் ஆப்கன் வீரர் ஒருவர் இறந்தாரென ஜேர்மனி இராணுவம் தெரிவித்துள்ளது. விமான நிலையத்தின் வடக்கு பகுதியில் நடந்த சண்டையில் ஒரு வீரர் பலியானார். மூன்று பேர் காயம் அடைந்தனர் என்று ஜேர்மனி இராணுவம் அதன் ருவிட்டர் பக்கத்தில் கூறியுள்ளது.

காபூல் விமான நிலையத்துக்கு வெளியே தலிபான்கள் தங்கள் வீரர்களை நிறுத்தியிருக்கிறார்கள்.

இதேவேளை, காபூல் விமான நிலைய வளாகம் மற்றும் அதற்கு உள்ளே அமெரிக்கா தலைமையிலான படையினருக்கு உதவியாக ஆப்கன் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். எனினும், சிறிது நேரத்தில் நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகவும் நேட்டோ படைகள் தெரிவித்தன. (ஐ)

# சின்சினாட்டி ரென்னிஸ்: ஆஷ்லே பார்டி சம்பியன்!

சின்சினாட்டி, ஓக. 24

சின்சினாட்டி ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டி வென்றார்.

மேற்கத்தேய தெற்கத்தேய ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடக்கிறது. இதில், பெண்களுக்கான இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடந்தது.

இந்த இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டியும் சுவிற்சர்லாந்தின் ஜில் ரெய்ச்மன்னும் மோதினர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆஷ்லே பார்டி 6 -3, 6-1 என்ற செற்கள் கணக்கில் இலகுவாக வெற்றி சம்பியனைக் கைப்பற்றினார். (ஐ)





## சின்சினாட்டி ரென்னிஸ்: கிண்ணம் சுவரேவ் வசம்!

சின்சினாட்டி, ஓக. 24

சின்சினாட்டி ரென்னிஸில் ஆண்களுக்கான தொடரில் வெற்றிக் கிண்ணத்தை ஜேர்மனியின் அலெக்சாண்டர் சுவரேவ் கைப்பற்றினார்.

மேற்கத்தேய தெற்கத்தேய ரென்னிஸ் தொடர் அமெரிக்காவின் சின்சினாட்டி நகரில் நடக்கிறது. இதில், ஆண்களுக்கான இறுதிப் போட்டி நேற்று நடந்தது.

இந்தப் போட்டியில் ஜேர்மனியின் அலெக்சாண்டர் சுவரேவ், ரஷ்யாவின் அந்த்ரே ரூபலெவ்வும் மோதினர்.

ஆரம்பம் முதலே போட்டியில் ஆதிக்கம் செலுத்திய சுவரேவ் முதல் செற்றை 6 -2 என்ற கணக்கில் கைப்பற்றினார். இரண்டாவது செற்றையும் 6 - 3 என்ற கணக்கில் வென்றார். இதனால், போட்டியை 6 -2, 6-3 என்ற செற்கள் அடிப்படையில் வென்று கிண்ணத்தை தன் வசமாக்கினார். (ஐ)

## விரைவான 5 சதங்கள் பாபத் ஆலம் சாதனை

கிங்ஸ்ரன், ஓக. 24

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக நடந்து வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியின் பாபத் ஆலம் ஆட்டமிழக்காமல் 124 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இந்த சதத்தின் மூலம் விரைவாக 5 சதங்களை அடித்த வீரர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார். அவர் 22 இனிங்ஸ்களில் விளையாடி இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் யூனிஸ்கான் தனது 28வது இனிங்ஸ்களில் 5ஆவது சதம் அடித்தமையே சாதனையாக இருந்தது. அவருக்கு அடுத்து, சலீம் மலிக் (29 இனிங்ஸ்களில்) உள்ளார். (ஐ)





## விலகினார் மார்க் வூட்!

லண்டன், ஓக. 24

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலிருந்து இங்கிலாந்து அணியின் மார்க் வூட் விலகினார். தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் விலகினார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நான்காம் நாள் ஆட்டத்தின்போது மார்க் வூட் தோள்பட்டையில் காயம் அடைந்தார்.

எனினும், அவர் அணியில் தொடர்ந்து மருத்துவரின் கண்காணிப்பில் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் 5 விக்கெட்களை மார்க் வூட் கைப்பற்றினார்.

5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் 1- 0 என்ற கணக்கில் இந்தியா முன்னிலையில் உள்ளது. மூன்றாவது டெஸ்ட் போட்டி நாளை ஹெட்லிங்கில் தொடங்குகிறது.

## பரா ஒலிம்பிக் இன்று ஆரம்பம்

ரோக்கியோ, ஓக. 24

பரா ஒலிம்பிக் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஜப்பானின் ரோக்கியோவில் ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில் 4 ஆயிரத்து 500 வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவான ஒலிம்பிக் போட்டி முடிந்தவுடன் பரா ஒலிம்பிக் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாற்றுத்திறனாளியின் உடல்பாதிப்புக்கு ஏற்ப அவர்களின் விளையாட்டுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ரோக்கியோவில் கடந்த ஆண்டு நடைபெறவிருந்த ஒலிம்பிக் போட்டி தொற்று பரவலால் இந்த ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதையடுத்து பரா ஒலிம்பிக் போட்டியும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்தப் போட்டியில், வில்வித்தை, தடகளம், பட்மிண்ரன், சைக்கிளிங், குதிரையேற்றம், 5 பேர் உதைபந்தாட்டம் கோல்பால்,

ஜூடோ, பாராகனோ, துப்பாக்கி சுடுதல், நீச்சல் என 22 விளையாட்டுக்களில் 540 போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

TOKYO 2020
PARALYMPIC GAMES

# இலங்கையின் நீதித்துறை மீது இன்னமும் நம்பிக்கை உண்டு!

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 24

"நீதிச் சேவைகள் ஆணைக் குழு எவ்வாறு செயல்பட்டாலும் இந்த நாட்டின் நீதித்துறை தொடர்பில் எமக்கும் இன்னும் நம்பிக்கை உள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பாதுக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படப்போவதாகக் கூறியமைக்காக கனியவளத் துறை பொதுச்சேவையாளர் சங்கத்தின் இணைப்பாளர் ஆனந்த பாலித கைதுசெய்யப்பட்டார்.

எனினும், எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவின் முயற்சியால் எமது சட்டத்தரணிகள் முன்னிலையாகி அவரைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத்தனர்.

இதன்போது நீதிவான் மிக முக்கியமான ஒரு விடயத்தைக் கூறினார். கருத்துக் கூறும் சுதந்திரத்துக்குப் பொலிஸாரால் பாதிப்பு ஏற்படுத்த முடியாது.

ஆனந்த பாலித கூறிய கருத்தில் பொய்யான விடயங்கள் எதுவும் இல்லை என்று நீதிவான் தெரிவித்திருந்தார்.

போலியான தகவலால் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டிருப்பின் அது ஆனந்த பாலித்த தெரிவித்த கருத்தால் இல்லை. அரசிடம் டொலர் இல்லை. இதன்காரணமாகவே எரிபொருள் விலையேற்றம் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, எரிபொருளை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள் என்று அமைச்சர் உதய கம்மன்பில கூறியதன் காரணமாகவே மக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பில் அச்சநிலை ஏற்பட்டது எனவும் எமது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

அவ்வாறான கருத்தைக் கூறிய அமைச்சர் வெளியில் இருக்கும்போது உண்மையான கதையைக் கூறியவரை ஒடுக்குமுறைக்கு உட்படுத்துவதற்கு முயற்சித்த கீழ்த்தரமான அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கமான ஐக்கிய சேவை சங்கம் கண்டனம் தெரிவிக்கின்றது.

அதேபோன்று நீதிச் சேவைகள் ஆணைக்குழு எவ்வாறு செயற்பட்டாலும் இந்த நாட்டின் நீதித்துறை தொடர்பில் எமக்கும் இன்னும் நம்பிக்கை உள்ளது" - என்றார்.(இ)

# 9 ஆயிரத்து 606 பேர் வீடுகளில் சிகிச்சை

கொழும்பு, ஓக. 24

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான 9 ஆயிரத்து 606 பேர் வீடுகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று சுகாதார அமைச்சின் வைத்தியர் சேவை பிரிவின் மருத்துவர் அஜந்தி கருணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"கொழும்பு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 162 பேர், கம்பஹா மாவட்டத்தில் 1,883 பேர், களுத்துறை மாவட்டத்தில் 1,712 பேர் என வீடுகளில் 9 ஆயிரத்து 606 பேர் கொரோனாவுக்குச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை வீடுகளில் சிகிச்சை பெற்று வந்த 26 ஆயிரத்து 173 பூரணமாகக் குணமடைந்து தங்களது பணிகளுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் 370 பேரே வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளிலிருந்து சிகிச்சை பெறும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

வீடுகளிலிருந்து சிகிச்சை பெறுவோரின் நோய் நிலைமையை அறிந்துகொள்வதற்காக 900 வைத்தியர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

எனினும், இந்த வாரத்துக்குள் வைத்தியர்களின் எண்ணிக்கையை 1,500 ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது" - என்றார். (இ)

# கொரோனா தொற்றால் அம்புலன்ஸ் சாரதி சாவு!

இரத்தினபுரி, ஓக. 24

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் சேவையாற்றி வந்த நோயாளர் காவு வண்டியின் சாரதி ஒருவர், கொரோனா வைரஸ் தொற்றால் மரணமடைந்தார்.

சுமார் 20 வருடங்களாக நோயாளர் காவு வண்டியின் சாரதியாகச் சேவையாற்றி வந்த நிவித்திகல பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய பி.எப். அமரவீர என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக இரத்தினபுரி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

# சகலரின் ஆலோசனைகளையும் கேட்பதற்கு தயார்நிலையில் அரசு

## அமைச்சர் காமினி லொக்குகே கூறுகின்றார்

கொழும்பு, ஓக. 24

"அரசு என்ற வகையில் நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளடங்கலாக அனைவரினதும் ஆலோசனைகளையும் சுகாதார வழிமுறைகளுக்கு அமையக் கேட்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்."

- இவ்வாறு மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அனைத்து எதிர்க்கட்சியினரும் நாட்டை முடக்குமாறு கோரிக்கை விடுத்தனர். அதேபோன்று சுயமுடக்க நிலைக்குச் சென்றனர். ஆனால், ஒரு வாரத்துக்கு முன்னர் சுகாதார விதிமுறைளைமீறி எதிர்ப்பு நடவடிக்கைளை முன்னெடுத்தனர். இதன்காரணமாக கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டில் அதிகரித்துள்ளது.

இந்தத் தரப்பினர் நாட்டு மக்களை நேசிப்பதன் காரணமாக இவ்வாறு செயற்படுகின்றனரா? அல்லது தமது அரசியல் தேவைப்பாட்டை நிறைவேற்றிக்கொள்வதற்காக இவ்வாறு செயற்படுகின்றனரா?

நாம் அரசு என்ற வகையில் நாட்டைப் பாதுகாப்பதற்கு எதிர்க்கட்சி உள்ளடங்கலாக அனைவரினதும் ஆலோசனைகளையும் சுகாதார வழிமுறைகளுக்கு அமையக் கேட்பதற்குத் தயாராகவுள்ளோம். அதற்கமையவே ஜனாதிபதியும் செயல்பட்டு வருகின்றார்.

நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்தால், கொரோனா வைரஸ் தொற்றையும் எதிர்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஜனாதிபதியின் நடவடிக்கையின் காரணமாக இந்த நாட்டின் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசியை வழங்கக் கூடியதாகவுள்ளது.

ஆனால், தற்போது கருத்து தெரிவிக்கும் தொழிற்சங்கத் தலைவர்கள் எப்போதும் எமக்கு ஆதரவை வழங்கவில்லை. தடுப்பூசி ஏற்றும் திட்டத்தை ஆரம்பித்தபோது போராட்டங்களை முன்னெடுத்து தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முயன்றனர் - என்றார்.

(இ)


# மரண அறிவித்தல்

மலர்வு
30
-
05
-
1952



உதிர்வு
21
-
08
-
2021

## சிங்கராயர் பீலிக்ஸ் மனோதாஸ்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Drancyஐ வதிவிடமாகவும் கொண்ட சிங்கராயர் பீலிக்ஸ் மனோதாஸ் அவர்கள் 21-08-2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிங்கராயர் மார்கரட் மேரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராசா - இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், குணசீலி (தங்கா) அவர்களின் அன்புக் கணவரும், பீலிக்சியா (சுஜோ), கிளிற்றஸ், கிளாரன்ஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கெனத், சுமேத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஜோசப், மேரி, கொன்சி, கிளிற்றஸ், விமலதாஸ், காலஞ்சென்ற களிற்றஸ், பிறேமதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,நோவான், வியோனிக்கா, சொசானா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**கிளிற்றஸ் - மகன்**
**Mobile : +33698623707**

தகவல்:
**குடும்பத்தினர்**


# தென்மாகாண சிறை தொற்றாளர் எண்ணிக்கை 1,471ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 24

தென் மாகாண சிறைச்சாலைகளில் இதுவரை இனங் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,471 ஆக உயர்வடைந்துள்ளது என்று தென் மாகாண கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயலணியின் அதிகாரி சாமர மஹகமகே தெரிவித்தார்.

திஸ்ஸமஹாராமய, பூஸ்ஸ, அங்குனகொலபெலஸ்ஸ, காலி, மாத்தறை, வீரவில மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய சிறைச்சாலைகளிலேயே தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் அதிகளவான தொற்றாளர்கள் பூஸா சிறைச்சாலையிலேயே இனங்காணப்பட்டுள்ளனர். பூஸா சிறைச்சாலையில் இதுவரை 763 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

குறைந்தளவிலான தொற்றாளர்கள் அம்பாந்தோட்டை சிறைச்சாலையில் இனங்காணப்பட்டுள்ளனர். குறித்த சிறைச்சாலையில் இதுவரை 4 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேபோன்று அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் 283 தொற்றாளர்களும், காலி சிறைச்சாலையில் 117 தொற்றாளர்களும், வீரவில சிறைச்சாலையில் 50 தொற்றாளர்களும், மாத்தறை சிறைச்சாலையில் 31 தொற்றாளர்களும், திஸ்ஸமஹராம சிறைச்சாலையில் 18 தொற்றாளர்களும் இனங்காணப்பட்டுள்ளனர். (இ)

# கண்டியில் தொடர்மாடியிலிருந்து வீழ்ந்து ஒன்றரை வயது பெண் குழந்தை மரணம்

கண்டி , ஓக. 24

கண்டி மாவட்டம், கலஹா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நில்லம்பை - குருக்கலை பகுதியில் தொடர்மாடி குடியிருப்பிலிருந்து வீழ்ந்து ஒன்றரை வயதான பெண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அயலவர் ஒருவர், குடியிருப்பின் முதலாம் மாடியில் குறித்த குழந்தையைத் தூக்கிவைத்திருந்தபோது குழந்தையின் தொப்பி கீழே வீழ்ந்துள்ளது.

தொப்பியை எடுக்க முயன்ற சந்தர்ப்பத்தில், அவர்கள் நின்றுகொண்டிருந்த பகுதியில் இருந்த சிமெந்து கற்களால் அமைக்கப்பட்ட மதில் சரிந்ததில் இருவரும் கீழே வீழ்ந்துள்ளனர்.

இதையடுத்து, குழந்தையும், குழந்தையை தூக்கி வைத்திருந்த 32 வயதான நபரும் பேராதனை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (இ)

## ஓக.30இற்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டை முடக்குமாறு சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் முன்னாள் பிரதானி விசேட மருத்துவர் நிஹால் அபேசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வைரஸ் பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை போதுமானது அல்லவெனவும், பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றமை அத்தியாவசியமானது எனவும் அவர் கூறினார்.

இவ்வாறான நிலையில், 30ஆம் திகதிக்கு பின்னர் நாடு தொடர்ந்தும் சில தினங்களுக்கு முடக்கப்படுமா?

என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், இது வரை அவ்வாறான தீர்மானத்தை எட்டவில்லை என்று குறிப்பிட்டார். (அ)

## எந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கும்.

நீண்ட காலத்துக்கு நாட்டை மூடுவதற்கான சாத்தியம் இல்லை. சுகாதார மற்றும் பொருளாதார அம்சங்கள் இரண்டையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

இது கொரோனா வைரஸின் இயல்பு என்பதால் தொற்றுநோய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு காரணமாக தொற்றுநோய்களின் எண்ணிக்கையில் பெரிய குறைப்பு இருக்காது. ஒரு மாத முடக்கத்துக்குப் பின்னரும் வைரஸ் தொடர்ந்து பரவுகிறது.

இதனை நிர்வகிக்க ஒரு செயல்முறை உருவாக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதால், அரசின் அனைத்து உறுப்பினர்களும் தியாகம் செய்யத் தயாராக இருக்கின்றோம்.

அரசு உறுப்பினர்கள் ஏற்கனவே அந்தந்த தொகுதிகளில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். பொதுப் பிரதிநிதிகள் தேவைக்கேற்ப தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்பதில் எந்த விவாதமும் இல்லை - என்றார். (அ)

## கொரோனா இடரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நாட்டை முடக்காமல் அன்றாட செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதே அரசாங்கத்தின் நோக்கமாகக் காணப்பட்டது.

எனினும் வர்த்தக சங்கங்கள் உள்ளிட்டவை சுயமாக முடக்கத்தை ஆரம்பித்தன. இதனை எதிர்பார்த்திராத ஜனாதிபதி விருப்பம் இல்லாவிட்டாலும் நாட்டை முடக்க வேண்டிய நிலைக்கு நிர்பந்திக்கப்பட்டார்.

எனவே தான் தொடர்ந்தும் முடக்க நேரிட்டால் தியாகங்களுக்கு தயாராகவேண்டும் என்று ஜனாதிபதி மறைமுகமாக நாட்டு மக்களுக்கு எச்சரித்துள்ளார். இந்த மறைமுக எச்சரிக்கையின் மூலம் எதிர்வரும் தினங்களில் அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றை தவிர்க்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொவிட் தொற்றின் காரணமாக இரு வாரங்களுக்கு நாட்டை முடக்கியமை மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் அல்ல. அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டம் இன்மையே இதற்கான பிரதான காரணி-என்றார். (அ)

## உச்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 94 ஆயிரத்து 353 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 222 பேர் குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 44 ஆயிரத்து 381 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரி பிரிவில் 3 பேரும், சங்கானை பிரதேச மருத்துவ மனையில் 3 பேரும், பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் இருவரும், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவ மனையில் ஒருவரும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் ஒருவரும், நல்லூர் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருமென 102 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் 25 பேருக்கும், மாந்தை கிழக்கு மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவ மனையில் ஒருவருக்குமென முல்லைத்தீவு மாவட்டத்தில் 27 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பொது மருத்துவமனையில் இருவரும், வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவருமென வவுனியா மாவட்டத்தில் ஐவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று, மன்னார் பொது மருத்துவமனையில் ஒருவர் தொற்றாளராக உறுதிப்படுத்தப்பட்டார்.

தவிர, இரணைமடு விமானப்படை முகாமில் 7 பேருக்கும், மன்னார் கடற்படையில் இருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## கொரோனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுட்டிக் காட்டினார்.

சுகாதார மேம்பாட்டுப் பணி யகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே மருத்துவர் ரணில் ஜெயவர்த்தன இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

நீரிழப்பைத் தடுக்க கொரோனா நேர்மறை நோயாளிகள் தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

சிறிதளவு வெப்பநிலை கூட உள்ள நோயாளிகள் சுவை இல்லாமை, இருமல் மற்றும் சுவாசக் குறைபாடு உள்ள கொரோனா நோயாளிகள் உட்பட குடி தண்ணீரில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

அத்தகைய நபர்கள் உணர்வுபூர்வமாக அதிக தண்ணீர் குடிக்கவேண்டும். ஒருவரின் குடிதண்ணீர் உட்கொள்ளும் பதிவை வைத்திருப்பது தண்ணீர் உட்கொள்ளலை கண்காணிக்கும் ஒரு முறையாகும்.

ஒருவரின் சிறுநீரின் நிறத்தின் மூலம் போதுமான அளவு தண்ணீர் குடித்திருக்கிறார்களா என்பதைத் தீர்மானிக்க முடியும். போதுமான அளவு தண்ணீர் சேர்ப்பது தெளிவான சிறுநீரைக் குறிக்கும்.

ஒரு தனிநபர் விற்றமின்களை எடுத்துக் கொண்டால், அது சிறுநீரின் நிற மாற்றத்துக்கு பங்களிக்கும் என்பது விதிவிலக்கு.

எனவே கொரோனா நோயாளிகள் தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் உட்கொள்வதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு அரை மணி நேரத்துக்கும் ஒரு கிளாஸ் தண்ணீர் குடிக்கவேண்டும். மீதமுள்ளவற்றை உணவு உட்கொள்வதன் மூலம் நிறைவு செய்ய முடியும் - என்றார். (அ)

# சேதன பசளையை ஊக்குவிக்க யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு



யாழ்ப்பாணம், ஓக. 24

வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு பிரசாரம் நேற்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டதாக பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் அஞ்சலாதேவி சிறீரங்கன் தெரிவித்தார்

யாழ். மாவட்டத்தில் வரும் கால போகத்தில் கிட்டத்தட்ட 12 ஆயிரம் ஹெக்ரெயர் அளவில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது இந்த நெற்செய்கைக்கு தேவையான சேதனப் பசளையை விவசாயிகள் தாங்களே உற்பத்தி செய்ய வேண்டிய கடப்பாடு தற்போது ஏற்பட்டுள்ளது

இதற்கமைய விவசாய அமைச்சின் ஆலோசனை மற்றும் விவசாய திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய விவசாயிகள் சேதனப் பசளை உற்பத்தி செய்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத் தும் விதத்தில் வாகன பேரணி நடத்தப்படுகின்றது. இதன் மூலம் விவசாயிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள் ஊடாக சேதனப் பசளை தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது - என்றார். (3)

## குருநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேறு இரண்டு மோட்டார் சைக்கிளில் துரத்தி வந்த நால்வர் வழிமறித்து சரமா ரியான வாள்வெட்டுத் தாக்கு தலை நடத்தினர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூவரும் குருதி வெள்ளத்தில் கிடந்த நிலையில் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களால் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மூவரில் ஒருவரின் கால்கள் இரண்டும் கடுமையாக வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகின. அவரே உயிரிழந்துள்ளார் என்று யாழ். போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நீதிவானின் விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு பொலிஸாரும் முப்படையினரும் வீதிச் சுற்றுக்காவல் பணிகளில் ஈடுபடும் வேளையில் வன்முறைக் கும்பல் இந்தத் தாக்குதலை முன்னெடுக்கப்பட்டது. (அ-03)

# சம்பளத்தை வழங்கமாட்டேன்

### அடம்பிடிக்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஓக. 24

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொரோனா தொற்றை ஒழிக்க அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஒரு மாதச் சம்பளத்தை அர்ப்பணிப்பு செய்ய முன்வந்துள்ளனர்.

எனினும் 225 உறுப்பினர்களில் ஒருவர் தனது சம்பளத்தை அர்ப்பணிக்க முடியாதென நேற்று கூறியுள்ளார்.

சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சரான பியல் நிஸாந்த கொழும்பில் நேற்று நடந்த ஊடக சந்திப்பில் இதனைக் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்திலுள்ள அரச வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட கடனுக்காக தனது சம்பளத்தொகை அப்படியே அறவிடப்படுவதாகவும், கொரோனா பணிக்காக தனது சம்ப ளத்தை அர்ப்பணிக்க முடியாத பொரு ளாதார இக்கட்டான நிலைக்கு தாம் தள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

## கௌரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டின் முக்கிய அரசியல் வழக்குகளில் திருமதி கௌரி ஷங்கரி தவராசா முன்னிலையாகி நியாயமான தீர்ப்புகளை தனது வாதத் திறமையால் பெற்றுக் கொடுத்தார்.

அவருக்கு கோவிட்-19 நோய்த் தொற்றுள்ளதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது. (ஐ)

## அமெ.தூதருடன்...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
- பிரஸ் பேர்ல்“ கப்பல் விபத்து போன்ற சந்தர்ப்பங்களில் அமெரிக்காவின் ஒத்துழைப்புகளுக்கு வெளிவிவகார அமைச்சர் நன்றி தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தனியார் துறையினரின் முதலீடுகளை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் வரவேற்றுள்ளார். (இ)

ஈழநாடு
Eelanadu

# ஆப்கானிஸ்தானில் ஜனநாயக ஆட்சியை உடன் மீளமைக்கவேண்டும் தலிபான்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை



**கொழும்பு, ஓக. 24**

**ஆப்கானிஸ்தானில் மனித உரிமைகளை மதித்து, மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் ஜனநாயக ஆட்சியை உடனடியாக மீளமைக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலிபான்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஆப்கானிஸ்தான் நிலைமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

"இலங்கையின் பிரதான அரசியல் எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தி ஆப்கானிஸ்தானின் அண்மைக்கால நடவடிக்கைகள் தொடர்பில் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி வருகின்றது.

ஆப்கானிஸ்தானில் உள்ள இலங்கையர்களைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக எடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தான் சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடாக இருப்பதால், இக்காலப் பகுதியில் சார்க் நாடுகளின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாட்டை உறுதி செய்ய அவர்களது உத்தியோகபூர்வ அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி மேலும் சார்க் அமைப்பின் பொதுச் செயலாளரை கேட்டுக்கொள்ளுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி இவ்வாறான நெருக்கடியான நிலையில் இலங்கை அரசின் சர்வதேசக் கடமைகள் பற்றியும் நினைவூட்ட விரும்புகின்றது. புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தலுக்கு ஆளாகக்கூடிய நாட்டுக்கு மீளவும் அனுப்பி வைக்கக் கூடாது என்னும் பொறுப்புக்கு மதிப்பளிக்குமாறும் ஐக்கிய மக்கள் சக்தி விசேடமாக அரசிடம் கேட்டுக்கொள்கின்றது.

இந்தச் சூழலில், தற்போது இலங்கையில் வசிக்கும் அல்லது எதிர்காலத்தில் இலங்கைக்குள் நுழையக் கூடிய ஆப்கானிஸ்தான் புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிக்க அரசுக்கு ஒரு குறிப்பிட்ட பொறுப்பு உள்ளது" - என்றுள்ளது.



# தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு

*கண்டி, ஓக. 24*

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் சமய வழிபாடுகளில் ஈடுபட்டு, புனித தந்தத்தைத் தரிசித்தார்.

தலதா மாளிகைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மற்றும் முதல் பெண்மணியை தியவதன நிலமே நிலங்கதேல பண்டார வரவேற்றார்.

கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் இறுதி ரந்தோலி பெரஹரா வீதி உலா வந்ததை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் முதல் பெண்மணி அயோமா ராஜபக்ஷ ஆகியோர் கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இருந்து பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# கர்ப்பவதிகளுக்கு தடுப்பூசி பாதிப்பை ஏற்படுத்துவதற்கான ஆதாரம் இல்லை

## மகப்பேற்று விசேட மருத்துவ நிபுணர் தகவல்

*கொழும்பு, ஓக. 24*

கொரோனாத் தடுப்பூசி கர்ப்பவதி பெண்களுக்கு எந்தச் சிக்கலையும் ஏற்படுத்தாது என மகப்பேற்று மற்றும் நரம்பியல் விசேட மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் தெரிவித்தார்.

இலங்கையில் தற்போது சுமார் 5 ஆயிரம் கர்ப்பவதிப் பெண்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், தடுப்பூசி மட்டுமே வைரஸிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக்கொள்ள ஒரே வழி எனவும் அவர் கூறினார்.

இலங்கையில் இன்று 24ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் கர்ப்பவதித் தாய்மாருக்கு தடுப்பூசி ஏற்றும் விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன அறிவித்திருந்தார்.

தற்போது வரையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் 27 கர்ப்பவதித் தாய்மார் மரணித்தனர் எனவும், இந்த எண்ணிக்கை அதிகரிக்க இடமளிக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், "சிறந்த தடுப்பூசி எது?" என்று தம்மிடம் கேள்வி எழுப்பப்படுகின்றது எனவும் விசேட மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் குறிப்பிட்டார்.

"நீங்கள் பெறும் முதல் தடுப்பூசி தான் சிறந்த தடுப்பூசி. கொரநாத் தடுப்பூசி கர்ப்பவதிப் பெண்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதற்கு எந்த அறிவியல் ஆதாரமும் இல்லை" எனவும் அவர் கூறினார்.

ஊரடங்கு உத்தரவு அமலில் இருந்த போதிலும் கர்ப்பிணிப் பெண்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் எனவும் விசேட மருத்துவ நிபுணர் சனத் லெனரோல் மேலும் தெரிவித்தார். (இ)

# கல்முனை வடக்கில் 16 பேருக்கு தொற்று

*கல்முனை, ஓக. 24*

கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனையால் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய முன்றிலில் 67 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் 16 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனை இதனைத் தெரிவித்துள்ளது.

பாண்டிருப்பில் 8 பேருக்கும், கல்முனையில் 4 பேருக்கும், சேனைக் குடியிருப்பில் 4 பேருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அனைவரும் தற்போதைய பொது முடக்கத்தை முறையாகக் கடைப்பிடித்து சுகாதாரவிதி முறைகளுக்கு ஏற்ப தங்களைத் தாங்களே கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையில் ஈடுபடுமாறும், பிரதேசத்தில் சுகாதாரப் பிரிவினர் முன்னெடுக்கும் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஆர்.கணேஸ்வரன் வெண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## கொரோனாத் தொற்றுக்குள்ளாகிய

# கர்ப்பவதிகளுக்கு தனிப்பட்ட பிரசவ அறைகள்!

*கொழும்பு, ஓக. 24*

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய கர்ப்பவதித் தாய்மார்களின் பிரசவத்துக்காக மருத்துவ மனைகளில் தனியான சிகிச்சை அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று குடும்ப நல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

இதனால் கர்ப்பவதித் தாய்மார்கள் தேவையற்ற அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுவரையில் 3 ஆயிரத்து 800 கர்ப்பவதித் தாய்மார்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதியானதுடன், அவர்களில் 850 பேர் தொடர்ந்தும் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

அதேநேரம், சில கர்ப்பவதித் தாய்மார்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் குடும்ப நல சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# எசல பெரஹராவில் யானைகள் குழப்பமடைந்ததால் பரபரப்பு!

*கண்டி, ஓக. 24*

கண்டி எசல பெரஹராவின் இறுதி ஊர்வலம் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற நிலையில், இதன்போது யானைகள் இரண்டு குழப்பமடைந்ததால் அந்தப் பெரஹராவில் கலந்து கொண்டவர்களிடையே பரபரப்பு நிலைமை ஏற்பட்டது.

கண்டி எசல பெரஹெரா கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமானதுடன், அதன் இறுதி ரந்தோலி பெரஹரா நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஊர்வலத்தில் பங்கேற்ற கதிர்காம தேவாலயத்தின் இரண்டு யானைகள் குழப்பமடைந்து சுற்றியுள்ளன.

இதனால் ஊர்வலத்தில் பங்குகொண்ட நடனக் கலைஞர்கள் பயத்தில் தப்பி ஓடுகின்ற காட்சிகள் அடங்கிய காணொலிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன.

எனினும், குறித்த சம்பவத்தில் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், குழப்பமடைந்த யானைகள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று இடம்பெற்ற கண்டி எசல பெரஹராவின் தீர்தோற்சவத்தையடுத்து பெரஹரா நிறைவு பெற்றது என்று ஸ்ரீதலதா மாளிகை நிர்வாகம் அறிவித்துள்ளது. (இ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர் - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - பா பாண்டி, இராவணன் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை



மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**
7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி கவிஞர் சோ.பத்மநாதன்



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு